கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(20.01.2019 - 20 தை 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 200, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



**புனித பவுலின் மனமாற்றம்**

**தை 25**

**உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்.**

# இளைஞர் ஆண்டு பிரகடனம் - 2019

## “இளையோரே எழுங்கள் உங்கள் வாழ்வை இறைஅன்பிற்கு கொடுங்கள்”.




கொழும்பு உயர்மறைமாவட்டம் 2019ம் ஆண்டை இளைஞர் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை 13.01.2019 அன்று நீர்கொழும்பு பெரியதெரு புனித மரியாள் பேராலயத்தில் மாலை 5.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் துணை ஆயர்களும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். இளைஞர் ஆண்டு உத்தியோகபூர்வமாக பேராயரினால் ஓலை வாசிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

இளையோர் ஆண்டானது இளையோர்களுக்கு முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்பதனை குறித்து நிற்கின்றது. திருத்தந்தையின் கூற்றுப்படி, நாம் நமது இளையோரை நமது குருத்தவ மற்றும் மேய்ப்புப்பணிகளின் பங்காளிகளாக்க வேண்டும். உண்மையில் அடுத்த ஆண்டு எங்கள் தலைமை ஆயர் அவர்கள் உலக ரீதியில் இளையோர் ஆண்டாக அறிவிக்கவுள்ளார். இளையோர் ஆண்டுக்கான மேய்ப்புப்பணிச் சுற்றுமடல் விரைவில் வெளியிடப்படும். பங்குத்தந்தையர்கள் இளையோரோடு இணைந்து நிகழ்ச்சிகளை ஒழுங்குப்படுத்தி இந்த இளையோர் ஆண்டைக் கொண்டாடுமாறு ஊக்குவிக்கின்றேன் என்று தனது மறையுரையில் பேராயர் கேட்டுக்கொண்டார்.

## கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை கரோல் போட்டி



கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை சிறார்களின் கரோல் போட்டி கடந்த மாதம் புனித சூசையப்பர் கல்லூரி பொன்ஜின் மண்டபத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பல பங்கு சிறார்கள் பங்குபற்றினர். வத்தளை வட்டாரம் நாயக்ககந்த பங்கைச் சேர்ந்த சிறார்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்கள். வெற்றி பெற்ற சிறார்களுக்கு ஞான ஒளி தனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது. இப்போட்டியானது கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணி. குருசன் குமார் பெரேரா அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

**தகவல் : சுபாசினி டேவிட்.**

## புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய பங்கு மண்டப திறப்புவிழா



புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய பங்கு மண்டபம் 13.01.2019 அன்று கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் காலை 8.00 மணித் திருப்பலியின் பின்னர் திறந்துவைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

**தகவல் : பீற்றர் ரொபின்சன்**



## இயேசு சபைக்கு இன்னுமொரு புதிய குரு

திருத்தொண்டர் நோயல் அஜந்தன் ஜெயநாதன் 26ம் திகதி தை மாதம் 2019 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு கொழும்பு, தெஹிவளை, புனித மரியாள் ஆலயத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

## குறுங்கால கற்கை நெறி

கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் இறையியலகம் இன்னுமோர் குறுங்கால கற்கை நெறியை எதிர்வரும் 26.01.2019 சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கை நெறியானது “யார் இந்த கிறிஸ்து” (கிறிஸ்துவியல்) என்ற தலைப்பில் அருட்தந்தை ஜெரால்ட் ரொசாய்ரோ அமதி அடிகளாரினால் 26.01.2019 சனிக்கிழமை முதல் தொடர்ந்து வரும் 10 சனிக்கிழமைகள் மாலை 4.00 மணிமுதல் 6 மணிவரை அக்குவைனாஸ் பல்கலைக்கழக விரிவுரை மண்டபம் ஒன்றில் நடாத்தப்படும்.

கற்கை நெறியிலே கலந்து கொள்பவர்களின் பெயர்கள் 26.01.2019ம் நாள் பதிவுசெய்யப்படுவதோடு, ரூபாய் 500/-ம் அறவிடப்படும். கற்கை நெறியின்...

15

**ஆண்டவரே உம் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன (தி.பா 19)**

## இயேசு சபைக்கு இன்னொரு புதிய குரு

### நோயல் அஜந்தன் ஜெயநாதன் (யே.ச)

இயேசு சபையைச் சேர்ந்த திருத்தொண்டர் நோயல் அஜந்தன் ஜெயநாதன் அவர்கள் யாழ் மறைமாவட்டத்தின் நாராந்தனை பங்கைச் சேர்ந்த திரு. நிக்கொலஸ் ஜெயநாதன் அவர்களதும், யாழ். புனித மரியாள் பேராலயப் பங்கின் திருமதி. லெட்டீசியா ஜெயநாதன் அவர்களதும், இளைய புதல்வனாக 1981 மார்கழித் திங்கள் 29ம் நாள் அன்று கொழும்பில் பிறந்தார். இவருக்கு இரண்டு மூத்த சகோதரிகள் உள்ளனர். திருத்தொண்டர் நோயல் அஜந்தன் தனது ஆரம்பப் பருவம் முதல் எட்டு அகவைகள் வரையும் புனித மரியாள் பேராலய சூழலில் வளர்ந்தார். அப்பொழுது தனது ஆரம்பக் கல்வியினை (தரம் 1-3) கொழும்பிலுள்ள புனித சூசையப்பர் கல்லூரியில் (St. Joseph's College) கற்றுத் தேர்ந்தார். பின்னர் இவர் தனது குடும்பத்துடன் புலம் பெயர்ந்து பாகிஸ்தான் நாட்டிற்குச் சென்றார். அங்கு இவரது குடும்பம் கராச்சி பிறயரே நகரிலுள்ள (Frere Town Karachi) புனித அந்தோனியார் ஆலயத்தின் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர்.

இவரின் தந்தை கராச்சி புனித பத்திரிசியார் கல்லூரியில் இரசாயனவியல் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தார். திருத்தொண்டர் நோயல் தனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து பாகிஸ்தான் கராச்சியில், புனித போல் ஆங்கில உயர்தர பாடசாலையில் (St. Paul's English High School) கேம்பிறிச் பொதுச்சாதாரண தரத்தையும் (Cambridge GCE O/L) இவர் பின்னர் கராச்சியில் கிறமர் பாடசாலையில் (Karachi Grammar School) தனது கேம்பிறிச் பொது உயர்தரத்தினையும் (Cambridge GCE A/L) கற்று சித்தியடைந்தார்.

இதனைத் தொடர்ந்து 2006இல் இவர் தனது பட்டப்படிப்பினை இரசாயனவியல் துறையில் வாட்டர்லூர், ஒன்டாரியோ, கனடா பல்கலைக்கழகத்தில் (University of Waterloo, Ontario, Canada) கற்றுத் தேர்ந்தார். தனது பட்டப்படிப்பினை நன்முறையில் கனடாவில் பூர்த்தி செய்ததன் பின்னர் இவர் மீண்டும் இலங்கைக்கு வந்து களனி, தலுகமவிலுள்ள "தஹாம் சிகில" (Daham Sihila) இயேசுசபையில் நவசன்னியாசத்தினை மேற்கொண்டு 2009ம் வருடம் தனது முதலாவது வார்த்தைப்பாட்டினை மேற்கொண்டார். பின்னர் 2010இல் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அனுப்பப்பட்டு அட்டானியோ டீ, மனிலா பல்கலைக்கழகத்தில் (Ateneo de Manila University) தனது முதுநிலை தத்துவமானிப் பட்டத்தினை தத்துவவியலில் பெற்றுக்கொண்டார். இவர் இறையியல் கல்வியைப் பொன்டிவிகல் கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் (Pontifical Gregorian University) தொடர்வதற்காக உரோம் நகரிற்கு 2015ம் ஆண்டு அனுப்பப்பட்டார். இவர் சித்திரை மாதம் 3ம் நாள் 2018 அன்று உரோம் நகரிலுள்ள ஜேசு ஆலயத்தில் (Church of the Gesu, Rome) ஏனைய 15 இயேசு சபை சகோதர்களுடன் திருத்தொண்டராக, அதிவணக்கத்திற்குரிய வால்ட்டர் சி. கஸ்பர் (His. Eminence Walter C. Kasper, Cardinal-priest of Ognissanti) அவர்களினால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

திருத்தொண்டர் நோயல் அஜந்தன் ஜெயநாதன் 26ம் திகதி தை மாதம் 2019 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு கொழும்பு, தெஹிவளை, புனித மரியாள் ஆலயத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்படவுள்ளார். அத்துடன் முதல் நன்றித் திருப்பலி 2019 தைத்திங்கள் 27ம் நாள் அதே ஆலயத்தில் ஞாயிறன்று காலை 10.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

## இறை அழைத்தல் கண்காட்சி – 2019

புனித சூசையப்பர் ஆலயத்தின் 150 ஆண்டை முன்னிட்டு இறை அழைத்தல் பற்றிய கண்காட்சி நடைபெறுகின்றது.

திகதி : மாசி மாதம் 03ம் திகதி

நேரம் : காலை 7.00 மணி திருப்பலியின் பின்

இடம் : ஆலய வளாகத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : உதவிப்பங்குத்தந்தை மனோஜ் குமார்**

## ஏழைகளை நேசிக்கும் சர்வமத ஒன்றியம் – இரத்தினபுரி



இரத்தினபுரி பேராலய சர்வமத ஒன்றியம் தை 16ம் திகதியன்று நடாத்திய நத்தார் விழாவன்று இஸ்லாமிய, இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் சகல மதத்தினரும் சேர்ந்த ஏழைகளுக்கு உலர்ந்த உணவு பொருட்கள் பொதிகளையும் மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப்பையும், பயிற்சிக் கொப்பிகளும் பேராலய உதவி பங்குத்தந்தை மரிய ஜோய் அடிகளார் வழங்கினார். குழந்தை இயேசுவின் பிறப்பை கொண்டாடும் எமக்கு இயேசு ஏழைகளையே அதிகமாக நேசித்தார் என்பதற்கு இது அடையாளமாக அமைந்தது எனலாம்.

## இரத்தினபுரி மறைமாவட்ட மறையாசிரியர்களின் ஒன்றுகூடல்



வருடாந்த மறையாசிரியர்களின் நத்தார் ஒன்றுகூடல் மார்கழி 15ந் திகதி சனிக்கிழமையன்று மறைக்கல்விநிலையத்தில் நடைபெற்றது. இவ்விழாவினை சிறப்பிப்பதற்காக கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மெக்வல் சில்வா ஆண்டகை சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

ஆயர் ஆண்டகையை மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்தந்தை ஜுட் அடிகளாரும், குருமுதல்வர் அருட்தந்தை டேமியன் பெர்னாண்டோ அடிகளாரும் ஏனைய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மறையாசிரியர்கள் அனைவரும் வரவேற்றனர். பதினைந்து வருட காலம் பணிபுரிந்த மறையாசிரியர்களுக்கு சிறப்பு சான்றிதழ்கள் வழங்கி வழங்கியதுடன் யாதொரு ஊதியமும் இன்றி இவ்வாறான மகத்தான பணிபுரியும் மறையாசிரியர்களை பாராட்டி, வாழ்த்தி, ஆசி வழங்கினார். மறையாசிரியர்களின் விளையாட்டுக்களும் கலைநிகழ்ச்சி, கரோல் கீதம் அனைத்து இடம்பெற்றது.

## இரத்தினபுரி பேராலய நத்தார் நடுநிசி திருப்பலியின் விசேஷம்



கடந்த நத்தார் இரவு திருப்பலியினை சிறப்பிப்பதற்கு இரத்தினபுரி ஆயல் இல்லத்திலிருந்து அருட்தந்தை ரோலன்ட் ரொட்ரிகோ அடிகளார் வருகை தந்திருந்தார். அடிகளாருடன் பங்குத்தந்தை எனஸ்லி சுரங்க அடிகளாரும், உதவிப்பங்குத்தந்தை மரிய ஜோய் அடிகளாரும் இணைந்து இயேசுவின் பிறப்பு விழா திருப்பலியினை ஒப்புக்கொடுத்தனர். பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுன் விசேடமாக பல பிரிவினைசபை A.O.G போன்ற சபை போதகர்களும், பாஸ்டர்களும் கலந்துகொண்டது மிகப்பெரிய சிறப்பம்சமாகும். மக்களை மகிழ்விக்கும் ஒரு நிகழ்வாக இருந்தது.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**



மடாம்பல் என்ற கிராமத்தில் நத்தார் தினத்தன்று இரவு திருப்பலியில் பாலன் குடிலை பங்குத்தந்தை திறந்து தூபம் காட்டுவதையும், அப்பங்கிலே தை முதலாம் திகதி அதாவது வருடத்தின் முதல் ஞாயிறு திருப்பலி



ஒப்புக்கொடுக்கும்போது காணிக்கை பவனியில் சிறார்கள் கலந்து கொள்வதையும் படத்தில் காணலாம்.

**தகவல் : கல்தேரா**

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
20 தை, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "இளமை இறைவன் கொடுத்த மிகப் பெரிய ஆற்றல்".

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்ஆண்டை இளையோர் ஆண்டாக 13.01.2019 அன்று நீர்கொழும்பு புனித மரியாள் போராயலத்தில் வைத்து பிரகடனப்படுத்தியுள்ளார்.

பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்த தன்மைக்கும் உந்து சக்திகளாக பல்வேறு காரணிகள் அறியப்பட்டாலும் அவற்றுள் முதன்மையானது மட்டுமல்ல தவிர்க்க முடியாத சக்தியாகவும் முன்நிற்பது அந்நாட்டின் இளைஞர்களே ஆவர். புதிய சிந்தனைகள், மேம்பட்ட திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, தளராத முயற்சி, வளர்ச்சி நோக்கிய இலக்கு, நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்கள் இளைஞர்களின் தகுதியையும் தரத்தையும் உயர்த்திப் பிடிப்பதால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது இயலாததாகும். எனவேதான் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இளைஞர்கள் தான் நாட்டின் எதிர்காலம் அவர்களின் கைகளில் தான் நாடு உள்ளது என்று இளைஞர்களின் சக்தியை உலகிற்கு உணர்த்தினார் சுவாமி விவேகானந்தர். இறைவன் தமது திட்டத்தில் இளைஞர்களை தமது மதிப்பீட்டினால் மேன்மைப்படுத்தியுள்ளார். இளமை இறைவன் கொடுத்த மிகப் பெரிய ஆற்றல். இந்த ஆற்றலை புனிதர்கள் போல் பயன்படுத்தினால் இளமைக்கு மாட்சி. இளைஞர்களுக்கு மகிமை.

இத்தகைய இளைஞர்களை மையமாகக் கொண்ட இவ்வாண்டிலே இளைஞர்கள் அனைவரும் புனிதர்களான வாழ அழைக்கப்பட்டுள்ளார்கள் என கர்தினால் ஆண்டகை இளைஞர்கள் ஆண்டை பிரகடனப்படுத்தும் வேளையில் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமன்று இளைஞர்கள் அன்னை தெரேசா, பிரான்சிஸ் சேவியர், மக்ஸ்மில்லியன் கோள்பே போன்ற புனிதர்களைப் போன்று தன்னலமற்ற சேவைகளை தம் மக்களுக்கு ஆற்ற அழைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் கூறியுள்ளார். இளைஞர்களே நீங்கள் கருவிலிருந்தே இறைவனால் அழைக்கப்பட்டுள்ளீர்கள். எனவே உங்கள் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழுங்கள். இவ்வாண்டு முழுவதும் உங்கள் வாழ்வை நன்முறையில் பயன்படுத்த இறைவனை வேண்டுகின்றேன்.

மேலும் இம்மாதம் 25ம் திகதி தூய பவுலின் மனமாற்றத்தை நினைவுகூர்கிறது பரிசுத்த திருச்சபை. திருச்சபைக்காக கிறிஸ்துவிற்காக சாட்சிகளாக வாழ்ந்தவர்களில் முக்கிய நபராக திகழ்பவர்தான் இந்த தூய பவுல். கிறிஸ்துவை மறுதலித்தவர் கிறிஸ்தவர்களை வதைத்தவர் இறுதியில் கிறிஸ்துவிற்காக தன்னுயிரையே கொடுத்தார். திருச்சபை வரலாற்றில் தூய பவுலிற்கு சிறப்பானதொரு இடமுண்டு. தமஸ்கு நகருக்கு செல்லும் வழியில் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்டு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு பிற இனத்தவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து பிற இனத்தவரின் திருத்தூதர் என்று அழைக்கப்பட்டவர். விசுவாசத்தின் மேன்மையால் தூதுரைப் பயணங்கள் மேற்கொண்டு பலரை மனமாற்றினார். அன்புப் போதனைகள் மூலம் பலரின் விசுவாசத்தை ஆழப்படுத்தினார். அன்று அவர் பல சபைகளுக்கு எழுதிய திருமடல்கள் இன்றும் எமது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றால் அது மிகையாகாது. எனவே இளைஞர் ஆண்டிலே இளைஞர்கள் அனைவரும் தூய பவுலடியாரை முன்னுதாரணமாகக் கொண்டு இறையாட்சிப் பணி ஆற்றிட முன்வரவேண்டும் என ஆசிக்கின்றேன்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# கொழும்பு உயர்மறைமாவட்ட இளையோர் ஆண்டு

Year of Youth 2019-2020
Archdiocese of Colombo, Sri Lanka

### இளைஞர் என்பவர் யார்?

கொழும்பு உயர் மறைமாவட்டம் 2019ம் ஆண்டை இளையோர் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. இவ்விளைஞர் ஆண்டிலே இளைஞர்கள் நல்ல முறையில் தங்களை தயாரிக்க வேண்டும். அத்தோடு இளைஞர், இளைஞன், இளைஞி, இளம்பெண், இளைமைப்பருவம், இளைய தலைமுறை... இப்படிப் பல்வேறு சொற்கள் இளைஞர்களை மற்றும் இளைஞர்களுடைய வாழ்க்கை முறையை சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இளையோர் என்பவர்களை 15 வயதுக்கும் 24 வயதுக்கும் உட்பட்டவர்கள் என்று ஐக்கிய நாடுகளின் பொதுக்குழு குறிப்பிட்டுள்ளது. உலக வங்கியோ குழந்தைப் பருவத்திற்கும் முதிர் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவத்தை இளமைப் பருவம் என்று அழைத்து 15 வயதுதிற்கும், 25 வயதிற்கும் உள்பட்டவர்களை இளைஞர் என்று மதிப்பிடுகிறது. இன்னும் சிலர் 30 வயதுவரை இளையோரின் வயதாக கணிப்பதும் உண்டு.

இப்படிப்பட்ட வேறுபட்ட கணிப்புகள் உலகமெங்கும் காணப்படுகின்றன. இளைஞர்கள் என்பவர்கள் குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது உடல் சார்ந்த, வயது சார்ந்ததாகக் கணிக்கப்படுகிறது. எனினும் மனநிலை, சிந்தனை, செயல்பாடு சார்ந்த நிலையில் இளைஞர் என்பவர் வயது வரம்பைத் தாண்டியவர் என்றே மதிக்க வேண்டும். எனவே வயது அடிப்படையிலும் மனநிலை அடிப்படையிலும் வயதைக் கொண்டு இளமைப் பருவத்தையே கணித்தோமென்றால் இன்று முப்பதுக்குள் முதுமை எய்துபவர்களின் பட்டியல் நீண்டிருக்கும். வெறும் உடல் தோற்றத்தைக் கொண்டு - வழுக்கத்தலை, நரைத்த முடி, ஒட்டிய வயறு, குழுவிழுந்த கன்னம், பசியால் வாடிய முகம், போதைப் பொருள்களால் களையிழந்த கண்கள், தவறான வழிமுறைகளால் உருவிழந்த தோற்றம், மதிப்பிடுவோம் என்றால் பலரையும் முதியோர் பட்டியலில் தான் சேர்க்க வேண்டும். ஆனால் வயதையும் மனநிலையையும் கணக்கில் எடுத்து இளைமைப் பருவத்தை குறிப்பிட விரும்புகிறோம். இப்பருவம் போராட்டம் நிறைந்த பருவம், சிக்கல் நிறைந்த பருவம், குழப்பம் நிறைந்த பருவம், யார் சொல்வதையும், கேட்க மறுக்கும் பருவம், புதிய வழிமுறைகளை தேடுவதாக நினைத்து தவறிழைக்கும் பருவம், எதிர்காலத்தைப் பற்றி அதிக பயமும், தயக்கமும் நிறைந்த பருவம், எதையாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடு அலையும் பருவம்.

கால ஓட்டத்தில் எண்ணத்தளவிலும், உடல் அமைப்பிலும், வாழ்க்கை அனுபவத்திலும், காதல் தோல்வியிலும், முதுமையின் தரைதட்டி-யிருப்போர் பலர். இவ்விளைஞர்கள் நம்பிக்கைத் தீபங்களை கரங்களில் ஏந்திக்கொண்டு நிற்பதாக நினைத்து தங்களையே சுட்டுக் கொண்டும், காயப்படுத்திக்கொண்டும், ஓலமிட்டுப் புலம்பக்கூடியவர்கள். சிலர் தோல்விகளைக் கண்டு நிரந்தரமாக மரணப்பிடியில் சிக்கி விழிபிதுங்கி வீதிகளில் பைத்தியமாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் கனவுகளை தங்கள் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு கற்பனை உலகைத் தேடி சிறகு விரித்து அனைத்தையும் இழந்து மனித சாயலே இல்லாமல் போகிறார்கள். இன்னும் சிலர் நம்பிக்கையோடும், சாதனைத் துடிப்போடும் பயணித்து, பிறகு வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளைக் கண்டு அவநம்பிக்கையோடும் வேதனையோடும் வீதி வீதியாக அலைந்து திரிகிறார்கள். இளைஞரை எதிர்மறையாக கண்ணோக்கும் சமுதாயம் நேர்மறையாகவும் கண்ணோக்க வேண்டும். ஒவ்வொரு இளைஞருக்குள்ளும் புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர வழி செய்ய வேண்டும். தன் 18 வயதிற்குள் மிகச் சிறந்த இலக்கியப் படைப்பை உருவாக்கினர் ஆல்பிரட் டென்னிசன் போன்றோர் இம்மண்ணில் பலர் உண்டு. தன்னுடைய 25 வயதிற்குள் இத்தாலியைவென்ற மாவீரன் நெப்போலியன் போன்று துணிச்சல்மிக்க வீரர்கள் உலகெங்கும் உண்டு. தன்னுடைய 25 வயதிற்குள் பல புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்திக் காட்டினானே நியூட்டன். அவரைப் போன்று புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தும் சாதனை இளைஞர்களும் உண்டு. ஒவ்வொரு இளைஞரும் இந்த சமுதாயத்தின் இதயத் துடிப்பு. இமயமலை உச்சிபோல் உயர வேண்டும் என்ற கனவு கொண்டவர்கள்..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



## தொடக்கமாக :

## புத்தம் புதிய ஆண்டு!

புதியதோர் ஆண்டு 2019 புலர்ந்துள்ளபோது, இறைவனை நம்பி வாழ்கின்ற நாம் நம் வாழ்வில் சென்ற ஆண்டு முழுவதும் ஆண்டவர் நிகழ்த்தியிருக்கும் அரும்பெரும் செயல்களை நினைத்து நன்றி கூறுவோம். “ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள், ஏனெனில், அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார்” (தி.பா 98:1) புத்தம் புதிய ஆண்டை நமக்குத் தந்திருக்கும் ஆண்டவரை மீண்டும் புகழ்ந்து பாட புதிய பாடல்களை நம் நாவினின்று எழச் செய்வாராக! (தி. பா 40:3)

## புதிய அழைப்பு!

ஆனால் இப்புதிய ஆண்டை நமக்குத் தந்திருக்கும் இறைவன் என்றும் புதியது அறிவிப்பவராக, அறிவித்ததை நிறைவேற்றுபவராக இருக்கிறார். “முன்னர் நான் அறிவித்தவை நிகழ்ந்துவிட்டன. புதியனவற்றை நான் அறிவிக்கிறேன், அவை தோன்றுமுன்னே உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்” (எசா 42:9). இதே இறைவன்தாம் ஒவ்வொரு புதிய ஆண்டையும் நமக்குத் தருவதோடு புதியதாய் நாம் சிந்தித்து புதிய பல நன்மைகளை நாம் நம் குடும்பங்களுக்கும், இச்சமூகத்திற்கும் செய்திட நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். என்றும் நாம் புதியது செய்ய அழைகின்றார். (எச 42:6-7).

வழி நம் வாழ்வு அமையும்போது நாம் இயேசுவுக்கு சாட்சிகளாகவும், மனிதருக்கு ஒளியாகவும் திகழ்கிறோம். அப்போது தூய ஆவியின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை (கலா 6:22-23) நம் சமுதாயத்தில் ஆறாய் பெருக்கெடுக்கும்.

## புதியன என்றும் நிலைத்திருக்கும்!

“இவ்வுலக வாழ்வில் எதுவும் நிலைத்திருப்பதில்லை. எங்கும் எதிலும் நிலைத்திருப்பது நிலையாமையே” என்கிறார் மெய்யியலாளர் நீட்சே. இவர் இறைவன் மீது நம்பிக்கையில்லாமல் இருந்தார். இதனால் இறைவன் இறந்துவிட்டார் என என் கல்லறையில் எழுதுங்கள் என்றார். நீட்சேயின் தத்துவத்திற்கு முற்றிலும் மாறாக இறைவன் நமக்குத் தரும் நம்பிக்கையின் தத்துவம் அமைந்துள்ளது. இறைவனின் நம்பிக்கைத் தத்துவம் இதுதான். “நான் படைக்கின்ற புதிய விண்ணுலகும், புதிய மண்ணுலகும் என் முன்னே நிலைத்திருப்பதுபோல், உங்கள் வழித்தோன்றல்களும் உங்கள் பெயரும் நிலைத்திருக்கும்” என்கிறார் ஆண்டவர் (எசா 66:22)




## பொலிவுடன் புதிய வாழ்வு!

“முன்பு இருந்ததே பின்பும் இருக்கும், முன்பு நிகழ்ந்ததே பிறகும் நிகழும். புதியது என்று உலகில் எதுவுமே இல்லை” (ச. உ 1:9) என்று சபை உரையாளரில் கூறும் ஞானியின் சொல்லைக்கேட்டு கைகட்டி வாய்பொத்தி சும்மா இருப்போமா? அல்லது சுறுசுறுப்பாக புதிதாகப் பிறந்திருக்கும் புத்தாண்டில் பொலிவுடன் வாழ புதியது நினைத்து, புதியது பேசி, புதுமையாய் செயல்படுவோமா? என்பது நம் ஒவ்வொருவரையும் ஏன் நாம் வாழ்ந்து வரும் சுற்றுச் சூழலையும் பொறுத்ததாகும்.

## கிறிஸ்து பிறப்பு

வார்த்தை மனுவுருவானார்.
நம்மிடையே குடி கொண்டார்.
தேவபாலன் - இயேசு பாலனாக
பாரினிலே பிறந்தார்.

அப்பத்தின் வீடாம் பெத்லகேமில்
அவதரித்தார்.
அவரே அப்ப - இரச வடிவில்
எமக்கு ஆன்ம உணவானார்.

வழியாக - ஒளியாக -
வாழ்வாக - வார்த்தையாக வந்தார்.
வாழ்வு தர வந்தார்.
ஞானமே உருவானவர்
ஞான ஒளியாக வந்தார்.

அந்த ஞான ஒளியை ஞானிகள் தேடினர்.
ஒளியைக்காண வழி காட்டியது விண்மீன்.

அருட்பொழிவுடன்
அவனியில் அவதரித்த ஆண்டவரை அகம்
மகிழ்ந்து அகிலம் எங்கும் அறிவிப்போம்.

ஆக்கம்:
பென்ஜமின்
சோமநாதர்.
தெஹிவளை.



**“அவர்களுக்கு நான் வேறோர் இதயத்தையும், புதியதோர் ஆவியையும் வழங்குவேன். கல்லான இதயத்தை அவர்கள் உடலினின்று களைந்துவிட்டு, சதையிலான இதயத்தை அருளுவேன்.”**

## புதிய மனிதர்களாக...

இவ்வுலகில் நம் அனுபவங்கள் நமக்கு கற்பிப்பது என்னவென்றால், இவ்வுலகில் நல்லதும் தீயதும் கலந்து நம்முன் பிரசன்னமாக இருக்கின்றன. நல்லவரும் தீமைசெய்பவரும் வாழ்வதை நம் கண்முன்னால் பார்க்கிறோம். என்றும் நாம் நன்மையானதைத் தேர்ந்து வாழ்ந்திட இப்புதிய ஆண்டில் இறைவன் நம்மை அழைக்கிறார். “உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்துகொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்” (எபே 4:23-24)

## புதிய இதயம், புதிய ஆவி!

இறைவனின் புதிய அழைப்பை நாம் ஏற்று புதியது செய்திட நமக்கு அவர் தருவது புதியதோர் இதயம், புதியதோர் ஆவி, “தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை” என்பார்கள். அதுபோல தன் ஒவ்வொரு படைப்பும், படைத்தவர் தன்னைப்போல என்றும் எதிலும் நீதியோடும், நேர்மையோடும் வாழ்ந்திட புதிய இதயத்தை நம் ஒவ்வொருவருக்கும் அருளுவதாகக் கூறுகிறார். இதற்காக “இறைவன் தன் மக்களோடு ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்கிறார் (எரே 31:31). அவர்கள் என் மக்கள், நான் அவர்களின் கடவுள் என்பதுதான் அந்த புதிய உடன்படிக்கை. “அவர்களுக்கு நான் வேறோர் இதயத்தையும் புதியதோர் ஆவியையும் வழங்குவேன். கல்லான இதயத்தை அவர்கள் உடலினின்று களைந்துவிட்டு, சதையிலான இதயத்தை அருளுவேன். அப்போது அவர்கள் என் நியமங்களின்படி நடப்பார்கள். என் நீதிநெறிகளுக்கு செவிகொடுத்து அவற்றைக் கடைப்பிடிப்பார்கள். அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள், நான் அவர்கள் கடவுளாய் இருப்பேன்” என்கிறார் ஆண்டவர் (எசே 11:19-20, 18, 31:36, 26-27)

## புதிய கட்டளை!

இப்புதிய அழைப்பை ஏற்று நாம் புதுப்பொலிவுடன் வாழ்ந்திட இறைவன் நமக்கு மீண்டும் தருவது என்றும் புதியதாய் இருக்கும் ஒரு புதிய கட்டளைதான். “ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்” என்கிறார் ஆண்டவர் (யோவா 13:34-35). இத்தகைய அன்பின்

## புதிய வானமும், புதிய பூமியும்!

இறைவன் படைக்கின்ற புதிய பூமியில் இறைவன் மையத்தில் இருப்பார். இறைவன் மையப்படுத்தப்படும் போதெல்லாம் அங்கு ஏழைகளும், ஒடுக்கப்பட்டவர்களும் மையத்திற்கு வருவார்கள் (மத் 25, 35-36) நேற்றைய உலகில் நாம் பார்த்தது பணக்காரர் மையத்திலும் ஏழைகள் விளிம்பிலும் இருந்தார்கள். இத்தகைய பூமி இறைவனைப் பொறுத்தவரையில் பழைய பூமி. அவர் படைக்கும் புதிய பூமியில் இப்போது ஏழைகள் விழிம்பிலிருந்து மையத்தை நோக்கிய பயணத்தில் காலெடுத்து வைத்துள்ளார்கள். இது இறைவனின் செயலே. இறைவனின் இச்செயல் புளிக்காரம் போன்றது. இறைவன் இப்புளிக்காரத்தை இப்பூமியினுள் ஏற்கனவே வைத்துவிட்டார். அதன் போக்கை, அதன் வீச்சை, அதன் வேகத்தை எந்த எதிர்ச்சக்தியும் தடுத்து நிறுத்தவோ மாற்றி அமைக்கவோ முடியாது. இப்புதிய பூமியை இறைவன் தொடர்ந்து படைப்பார். இறைவன் புதிதாக படைப்பனவற்றில் நாம் என்றென்றும் மகிழ்ந்திடுவோம் (தி.வெ 21:1, 2பேது 3:13) அவருடைய இவ்விடுதலைச் செயலில் நாமும் புதிய வழிகளில் பங்கெடுப்போம்.

## முடிவாக...

ஆம்! நம் ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்துபோகவில்லை! புதிதாகப் பிறந்திருக்கும் இந்த 2019ம் ஆண்டிலும் ஆண்டவர் அனைத்துப் படைப்புக்களையும் புதுப்பிக்கிறார். மாற்றி அமைப்பதும், திருத்தம் செய்வதும், மேட்டைப் பள்ளமாக்கவும், பள்ளத்தை மேடாக்கவும், வறியவரை நலன்களால் நிரப்புவதும், செல்வரை வெறுங்கையராய் அனுப்புவதும் இறைவனுக்கு கைவந்த கலை (லூக் 1:53). ஏனெனில் நம் இறைவன் பெரிதும் நம்பிக்கைக்குரியவர் (புல 3:22-23). மக்கள் தலைவர்களும், மண்ணின் மைந்தர்களும் இறைவனின் இத்தகைய வெற்றிகளையும், மேன்மை மிக்க, வல்லமை நிறைந்த செயல்களையும் புதிதாகப் பிறந்திருக்கும் இப்புதிய ஆண்டிலும் காண்பார்கள் (எசா 62:2).



# உலகின் மிகப்பெரிய தேவாலயம்

உலகின் மிகப்பெரிய தேவாலயம் உரோமிலுள்ள வாடிகன் நாட்டில் அமைந்துள்ளது. புனித பேதுரு தேவாலயமாகும். இதன் விதானம் என்பது தலைகீழாக கவிழ்க்கப்பட்ட ஒரு கிண்ணம் போன்ற தோற்றமுடையது. என்ஜினியர்கள், மின் வேலை பார்ப்பவர்கள், விதானத்தின் மேலே ஏறுபவர்கள் என இந்த விதானத்திற்கு மட்டும் நிரந்தரமாக 70 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்கள் விதானத்தின் மேல் ஏறி தேவைப்படும்போது ஜன்னல்களை திறக்க வேண்டும். மூட வேண்டும். பழுது பார்க்கவேண்டும். விளக்குகளைப் பொருத்தவேண்டும். திருவிழா நாட்களில் 5 ஆயிரம் விளக்குகளும், 1000 தீபங்களும் கொண்டு இந்த விதானம் அலங்கரிக்கப்படுகிறது.

ஆலயத்தின் முன்புறம் 1 இலட்சம் பேர் கூடுவதற்கு ஏற்ப மிகப்பெரிய முற்றம் ஒன்று இருக்கிறது. மக்களை ஆசீர்வதிப்பதற்காக போப் ஆண்டவர் பால்கனியில் காட்சி அளிக்கும்போது, இம்முற்றம் நிரம்பி வழியும். இந்த பால்கனியில் இருந்து நாட்டின் அனைத்து பகுதியையும் தெளிவாக பார்க்க முடியும்.

இந்த ஆலயம் புனித பேதுரு இறந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இதை கட்டி முடிக்க 150 ஆண்டுகளுக்கு மேலானது. 1453ம் ஆண்டு தொடங்கி 1609ல் முடிவடைந்தது.

நான்காம் நூற்றாண்டில் இந்த தேவாலயம் மரத்தால் கட்டப்பட்டது. ஆயிரம் ஆண்டுகள் கழித்து அழிய தொடங்கியது. அந்த சமயத்தில் மறுபடியும் பிரமாண்டமான ஒரு தேவாலயம் கட்ட தொடங்கினார்கள். ஆலயத்தின் உள்ளே 43 ஆயிரம் பேர் மண்டியிட்டு இறைவனை பிரார்த்திக்க முடியும். திருவிழா நேரங்களில் ஆலயத்தில் இருக்கும் மிகப்பெரிய 800 தூண்களும் அலங்கரிக்கப்படும்.

இந்த தேவாலயத்தில் திருத்தந்தையர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் வழிபடுவதற்கு என்றே 27 இடங்கள் இருக்கின்றன. பைபிள் பல மொழிகளில் இங்கு வாசிக்கப்படுகிறது. ஆலய பொக்கிஷத்தில் ஆபரணங்கள், தங்க சிலுவைகள் உலகத்திலுள்ள எல்லா வகையான நாணயங்களும், பதக்கங்களும் இருக்கின்றன. இவற்றை மட்டும் பார்ப்பதற்கென பல நாட்கள் செலவிட வேண்டும். கலைகூடங்கள், நூலகங்கள், புராதன சேகரிப்பு பொக்கிஷங்கள், பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. அத்தாட்சி அடையாள அட்டைகள் கொடுக்கப்படுகின்றன. இந்த அட்டைகள் இருந்தால் மட்டும் பொக்கிஷ அறைகளுக்குள் நுழைய முடியும்.

பல கிலோ மீட்டர் தொலைவுக்கு நின்று பார்த்தாலும் இந்த ஆலயத்தை நன்றாக பார்க்க முடியும். ஆலயத்தின் மேல் பக்கத்தில் பொன் தகடுகள் பதிக்கப்பட்டு பளபளக்கின்றன. உச்சியில் பளிங்கு எழுத்துக்கள் பதிக்கப்பட்டுள்ளன. மைக்கேல் ஏஞ்சலோ என்ற உன்னத கலைஞனின் ஓவிய படைப்புக்கள் விதானத்தை அலங்கரிக்கின்றன. விதானத்தின் வடிவமைப்பு ஏஞ்சலோவின் கற்பனைப்படியே வடிவமைக்கப்பட்டது. ஆலயத்தை காவல் காப்பதற்காக சுவிட்சர்லாந்தில் இருந்து 100 காவலாளிகள் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களில் சீருடை அணிந்து இறகு சொருகப்பட்ட தொப்பியுடனும், ஈட்டியுடனும் நிற்கிறார்கள்.

மத குருமார்கள் கருஞ்சிவப்பு ஆடை அணிந்து இருப்பார்கள். போப்பாண்டவர் தங்க வேலைப்பாடுகளால் ஆன 3 முடிகளை கொண்டு அலங்கரிக்கப்பட்ட குல்லாவை அணிந்து உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பார். அவர் தனது கைகளை உயர்த்தி மக்களை ஆசீர்வாதம் செய்யும்போது, "வைவா இல் பாபா" என்ற கோஷம் மைக்கேல் ஏஞ்சலோ விதானத்தை நிரப்பும். அந்த கோஷத்திற்கு போப்பாண்டவர் "நீடூழீ வாழ்க" என்று பொருள்.

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் – 01

# கிறிஸ்துவைப் பின்செல்லுதலும் நிலையற்ற உலகப் பொருட்களை வெறுத்தலும்

- "என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான்" (யோ 8:12)
- நாம் ஒளி பெறவும், இருள் படராமல் நம் இதயத்தைக் காக்கவும் உண்மையாகவே விரும்பினால், கிறிஸ்துவின் வாழ்வையும் வழிகளையும் கண்டொழுக வேண்டும் என்று கிறிஸ்துவின் இக்கூற்று அறிவுறுத்துகிறது.
- எனவே, இயேசு கிறிஸ்துவின் வாழ்வைப்பற்றிய சிந்தனையே நம் தலைசிறந்த பணியாக விளங்கவேண்டும்.
- கிறிஸ்துவின் போதனை புனிதர்களின் எல்லா அறிவுரைகளையும் விடச் சிறந்தது. இதை ஏற்று வாழ்பவன் இதில் மறைந்த மன்னாவைக் காண்பான்.
- ஆனால் நற்செய்தியை அடிக்கடி கேட்பதனால் அதில் சிலருக்கு ஆர்வம் குறைகிறது. ஏனென்றால், அவர்களிடம் கிறிஸ்துவின் உளப்பாங்கு இல்லை.
- கிறிஸ்துவின் மொழிகளை முழுமையோடும், சுவையோடும் புரிந்துகொள்ள விரும்புகிறவன், தனது முழு வாழ்வையும் கிறிஸ்துவின் வாழ்வுக்கு ஒத்ததாகச் செய்யவேண்டும்.
- தாழ்ச்சியின்மையால் நீ திரித்துவத்தை மனம் நோகச் செய்துவிட்டு, திரித்துவத்தைப்பற்றி ஆழ்ந்த சொற்போர் நடத்துவதால் என்ன பயன்?
- உண்மையில் உயர்ந்த சொற்கள் ஒருவனைத் தூயவனாகவோ, நீதிமானாகவோ ஆக்குவதில்லை. ஆனால் ஒழுக்கமான வாழ்க்கையே ஒருவனை இறைவனின் நண்பன் ஆக்கும்.
- மனம் வருந்துதலைப்பற்றி அறிவதைவிட மனம் வருந்துவதையே நான் மிகவும் விரும்புகிறேன்.
- புறத்தளவில் திருமறைநூல் முழுவதையும், எல்லாப் பெரியார்களின் நல்லுரைகளும் உனக்குத் தெரியும் என்றாலும், இறையன்பும் அருளும் இல்லையென்றால், அவற்றால் நீ அடையும் பயன் என்ன?
- இறைவனுக்கு அன்பு செய்வதும் அவர் ஒருவருக்கே பணி புரிவதும் தவிர மற்றெல்லாம் பயனற்றவை, முற்றிலும் பயனற்றவை.
- மண்ணுலகை வெறுத்து விண்ணரசை நாடுவதே உன்னத ஞானம்.
- எனவே, அழியும் செல்வத்தைத் தேடுவதும், அதில் நம்பிக்கை வைப்பதும் பயனற்றவை.
- பின்னால் கொடிய தண்டனைக்கு உள்ளாகும் உடல் இன்பத்திற்கு இணங்குவதும், அதை நாடுவதும் பயனற்றவை.
- நீடிய வாழ்வில் விருப்பம் கொள்வதும், வாழ்க்கையை நன்னெறிப்படுத்த முயலாதிருப்பதும் பயனற்றவை.
- இவ்வுலக வாழ்வில் கவனம் செலுத்துவதும், இனிவரும் வாழ்வைப்பற்றிக் கவலை கொள்ளாதிருப்பதும் பயனற்றவை.
- விரைவில் மறைந்துபோவதை நாடுவதும், அழியா இன்பத்தை நோக்கி விரையாதிருப்பதும் பயனற்றவை.
- "காண்கிறதனால் கண் நிறைவடைவதுமில்லை. கேட்கிறதனால் செவி நிறைவு பெறுவதுமில்லை" என்னும் பழமொழியை அடிக்கடி நினைத்துக்கொள்

## மனம் மாறிய பவுல்



பன்னிரெண்டு சீடர்களைத் தவிர மேலும் ஒருவர் இயேசுநாதரின் மனமார்ந்த சீடனாக வாழ்ந்தார். அவர் தான் புனித பவுல் என்பவர். இவர் இயேசு வாழ்ந்த காலத்தில் இருந்தவர். இவரின் இயற்பெயர் சவுல். தன் இளவயதிலிருந்து யூத மதக் கோட்பாடுகளில் வைராக்கியமுள்ளவராக இருந்தார். சொல்லப்போனால் ஒரு யூத மத வெறியனாகவும் இருந்தார். தன் 35ம் வயதில் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். வரலாற்றின்படி கி.பி 54-68க்கிடையில் நீரோ மன்னனாட்சியில் பவுல் தியாக மரணமடைந்தார்.

விவிலியத்தில் (பைபிள்) இயேசு பிறப்பும், பிறப்பிற்கு பின் நடந்தவைகளை குறித்து எழுதிய பகுதிக்கு புதிய ஏற்பாடு என்று பெயர். இதில் 27 நூல்கள் உள்ளன. இவற்றில் 13 நூல்கள் புனித. பவுல் எழுதியனவாகும். இயேசுநாதர் உரைத்தபடி, அவர் மறைவுக்குப் பின் இறைச் செய்தியை பல நாடுகளுக்கும் ஏந்திச் சென்றவர் புனித பவுல் என்பதை விவிலியத்தில் காணலாம்.

# இயேசுவைப் போல் பிறரின் முகம்பார்த்து அவர்களின் இதயங்களோடு பேசுவோம்



உலகம் இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருக்க மனிதர்களும் இன்னுமொருவரின் முகம் பார்த்து பாசத்துடன் கதைக்க முடியாத இயந்திர மனிதர்களாக மாறி வருவதை காணக்கூடியதாயுள்ளது.

ஒரு வீட்டிற்குள்ளேயே தொலைபேசியில் உரையாடும் அவலம் அரங்கேறும் இக்கால கட்டத்தில் இயேசுவைப் போல் மனிதரின் முகம் பார்த்து, இதயங்களோடு உரையாடி, உறவாடும் மனிதர்களாக மாறவேண்டிய தேவை பற்றிய விழிப்புணர்வை நாம் விரைந்தே பெற வேண்டியுள்ளது.

இன்று பிள்ளைகளோடு பெற்றோருக்கு கதைக்கவும், பெற்றோரோடு பிள்ளைகளுக்கு கதைக்கவும் நேரம் இல்லை. வேலைப்பளு அதிகம். செலவுகளை மேற்கொள்ள அதிகமாக உழைக்க வேண்டியுள்ளது என்ற காரணங்களும் பலதரப்பினதும் புலம்பல்களாகும்.

ஆனாலும் அன்பு உரையாடலும் உறவாடலும் அரவணைப்பும் இல்லாத நிலைமை குடும்பத்திலும் சமூதாயத்திலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளமையை கண்கூடாக காணக்கூடியதாயுள்ளது. பிறரின் உணர்வுகளை, தேவைகளை புரிந்து கொள்ளாமை, தேவைகளுக்காக மட்டும் மனிதர்களை பொருட்களாக பயன்படுத்தல் தேவை முடிந்ததும் தூக்கி எறிந்துவிடல், வன்முறை அதிகப்படியான சுயநலம், துஷ்பிரயோகம் இறை மனிதப் பண்புகளான அன்பு, இரக்கம், பரிவு, அர்ப்பணம் இல்லாமை என பாதிப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

நாம் ஒருவர் ஒருவரை சந்திக்கும்போது மகிழ்ச்சி, புத்துணர்வு, புதுவாழ்வு ஆழமாகும். அன்பு, உடனிருப்பு இவற்றை நாம் அனுபவிக்க வேண்டும். இயேசுவின் வாழ்வில் அவரின் திருத்தூதர்கள், சக்கேயு, மத்தேயு, சமாரியப்பெண், மகதலா மரியா, இப்படி பல்வேறுபட்டவர்களோடு இதயம் பார்த்து, முகம் நோக்கி உணர்வுகளை மதித்து இயேசு உடனிருந்து உறவாடியதால் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட அளப்பரிய மாற்றங்களை நாம் கூர்ந்து நோக்கினால் இவ்வுண்மை புரியவரும்.

எனவே மனிதர்களின் புறத்தோற்றம், உடை, பதவி, குடும்ப சூழல், பணம், அந்தஸ்து, பட்டம் வசதிவாய்ப்பு, படைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரதும் இதயங்களில் இருக்கும் காயங்கள், தவிப்புக்கள், சோர்வு இவற்றை வெளிப்படுத்தும் முகங்களின் கண்களில் தெரியும் பாஷைகளை புரிந்து ஏக்கங்களை அறிந்து, உணர்வுகளின் வகைகளை வாசித்து, பரிவோடு அரவணைத்து, அவர்களின் இதயங்களோடு பேசி, மகிழ்ச்சி, விடுதலை, புத்துணர்வு, புதுவாழ்வு இவற்றை நாமும் சுவைத்து நாம் உறவாடும் உறவுகளும், இதயங்களும் அவற்றை அனுபவித்து வாழ முயல்வோமாக.

**த. மேரி பற்றிசியா.**

## வெள்ளம் வந்தது வாரிச்சென்றது



மாரி வெள்ளம் வந்தது,
வாரிச்செல்ல வந்தது,
வெள்ளம் வீடுகளில்
வந்தது, வள்ளம் விடும்
நிலையும் வந்தது.
தண்ணீரில் மூழ்கியது
எம் சொத்துக்கள்,
கண்ணீரில் மூழ்கியது
எம் சொந்தங்கள்.
கமத்தொழில் பாதிப்பு
ஒருபக்கம்,
கடன் தொல்லை
பாதிப்பு மறுபக்கம்,
கதி கலங்கிய நெஞ்சம்
ஒருபக்கம்.
கண்ணீர் சிந்தும்
விழிகள் மறுபக்கம்.
வாரிப்பொழிந்த
வானமே,
வாரிப்போகாதே எம்மை,
வந்த துன்பம்
போதுமே,
இடம் பெயர்ந்ததும்
போதுமே.
இனி ஒருபொழுதும்
வேண்டாமே - எங்கள்
ஈரவிழிகளைப்
பார்ப்பாயே.
வாரிப்பொழிந்த
வானமே,
மாரியாய்ப்பொழியும்
மேகமே,
தேவையானதை மட்டும்
பொழிவாயே,
தொல்லைகள் தராது
காப்பாயே - எம்
சொல்லையே என்றும்
கேட்பாயே.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்.**
**தெஹிவளை.**

## இயேசுவின் நாமத்தில் செய்யும் செபம்.



நாம் செபிக்கும்போது இயேசுவின் நாமத்தில் செபிப்பது மிகவும் வல்லமையுள்ள செபமாகும். காரணம் இயேசுவின் நாமத்திற்கான வல்லமை அவரின் சிலுவைப் பாடுகள், மரணம், மற்றும் உயிர்ப்போடு இணைந்துள்ளது. அதனால் அவரின் பெயரைச் சொல்லி நாம் செபிக்கும்போது சிலுவை வழியாகத் தோன்றிய வல்லமை நமது செபத்தில் தோன்றுகின்றன. திருமறையில் நாம் வாசிப்பது போல், ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்: (பிலி. 2:10). “பின்னர் எழுபத்திரெண்டு பேரும் மகிழ்வுடன் திரும்பிவந்து, “ஆண்டவரே, உமது பெயரைச் சொன்னால் பேய்கள் கூட எங்களுக்கு அடிபணிகின்றன” என்றனர் (லூக். 10:17). “பேதுரு அவரிடம் வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை, என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும் என்று கூறி, அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கி விட்டார்கள். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன” (திப. 3:6-7).

**இது போன்ற இறை வெளிப்பாட்டின் அடிப்படையில் நாமும் இயேசுவின் பெயரில் செபிக்கும் போது நமது செபங்களும் வல்லமையுள்ளதாக மாறுகின்றது.**

## சுட்டிக் காட்டு! சுடர் விடு...



**குறைகள் இல்லாத மனிதர்கள் இல்லை!**
**குறைகளை குறைக்காதவன் மனிதனே இல்லை!**

மண்ணில் பிறக்கும் எல்லா மனிதர்களும் ஏதோ ஒரு நிலைகளில் குறையுள்ளவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய கல்வியறிவு, பெற்றுக்கொண்ட அனுபவங்கள், பின்பற்ற வேண்டிய வாழ்வு நெறிகள் மனிதர்களை ஏணிப்படிகளில் ஏற்றி வைக்க வேண்டும். செல்ல வேண்டிய பாதைகளையும், வெல்ல வேண்டிய இலக்குகளையும் சுட்டிக் காட்ட வேண்டும். சுடர்விட விரும்பும் நாம், இடர்களில் விழுவது ஏன்?

நம்மில் முழுமையானவர்கள் யாரும் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு வலு சேர்க்கும் விதமாக நம் முன்னோர்கள், “கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகளவு” என சொல்லி கொடுத்துள்ளனர்.

அன்று, இயேசுவை சந்திப்பதற்காக ஒரு பெரும் பணக்காரர் தேடி வருகிறார். இவர் அன்றைய மக்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டவர். இறைவாக்கினர் மோசேயின் கடுமையான சட்டங்களை அணுஅணுவாக கடைபிடிப்பதாக பெருமைப்பட்டவர். இயேசுவிடமிருந்தும் பாராட்டைப் பெறவேண்டும் என விரும்பினார். இதனால் வானத்தின் உச்சியில் உலாவர ஆசைப்பட்டார். தன்னிடம் குறையே இல்லை என்று கூறிய பணக்காரரை இயேசு உற்றுப்பார்க்கின்றார். அவரது பகட்டு வாழ்வு பளிச்சென இயேசுவின் கண்களுக்குத் தெரிகிறது.

“உன்னிடம் இன்னும் ஒன்று குறைவாய் உள்ளது” என இயேசு முழங்க, அவர் கர்வத்தோடு, என்னிடமா? என்ன என்று கேட்கிறார். சென்று “உன் பொருளையெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடு” என்ற இயேசுவின் வார்த்தைகள் அவரது வாழ்வின் ஏணிப்படிகளை சுட்டிக்காட்ட, அவரோ பாதாளத்தின் படிக்கட்டுகளையே தேடிச் செல்கிறார். தன்னிடம் குறையே இல்லை என எண்ணிய அவர், குறைகளைக் குறைக்க மனமில்லாது சென்றதாக லூக் 18:18-22ல் கூறப்படுகிறது.

குறைகள் எல்லோரிடமும் உண்டு. இவற்றை இயேசுவைப் போன்று நேர்மையோடு சுட்டிக் காட்டும் நல் உள்ளங்கள் குறைந்ததால்தான் சமூகத்தில் குற்றங்கள் நாளும் பெருகி வருகிறது.

மதம் பிடித்த மாணவர்களை குறை சொல்வதா? பணமே குறியென வாழும் பெற்றோர்களை குறை சொல்வதா? மதிப்பெண்களுக்காக மட்டுமே போராடும் ஆசிரியர்களைக் குறை சொல்வதா? திசை மாறிச் செல்லும் ஊடகங்களை குறை சொல்வதா? நாகரீகமற்ற நம் அரசியல் தலைமையை குறை சொல்வதா? மந்த புத்தியுள்ள மதவாதிகளைக் குறை சொல்வதா? யாரைக் குறை சொல்வது? நம் மனச்சான்று பதில் சொல்லட்டும்.

மானுட நேயம், மனித உறவுகள், சமூக அக்கறை, இறை நம்பிக்கையென்னும் புதுவாழ்வின் விடுதலைக் கூறுகளைப் புது இரத்தமாக, சமூகத்தில் பாய்ச்ச வேண்டும். குறைகளை சுட்டிக்காட்டியும், தவறுகளை தட்டிக்கேட்டும் செயல்பட்ட இறைவாக்கினர் எசாயாவைப் போன்ற மனிதர்கள், சமூகத்தில் தைரியமாக வலம் வரவேண்டும். மாபரன் இயேசுவைப் போன்று துணிவோடு, நேர்மையோடு செயல்பட அழைக்கப்படுகிறோம்.

# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது



## இறைவார்த்தை வழிபாடு

### பொதுக்காலத்தின் 2வது ஞாயிறு (20.01.2019)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 2வது வாரத்தின் முதல் நாளிலே இறைவனை தொழுதிடவும், அவருக்கு ஏற்ற பலியை நிறைவேற்றவும் குருவுடன் கூடி நிற்கும் திருஅவையின் இறைமக்களே! இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திருமண விழாவில் நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் மாட்சியினை உலகிற்கு வெளிப்படுத்தும் ஒரு மாபெரும் விழாவாக மாறிய நிகழ்வைத் தியானிக்க இன்றைய நற்செய்தி வாசகம் நம்மை அழைக்கின்றது. இந்த நிகழ்ச்சியின் ஊடாக இயேசுவின் சிறப்பான செயல்வடிவம் இரண்டினை நாம் பார்க்கின்றோம். ஒன்று பிறருடைய இன்னல்களை தன்னுடையதாக உணர்ந்து போராடுதல், இரண்டு பிறருடைய மனதுயரைப் போக்குவதற்காக தன்னையே முழுமையாக ஒப்புக்கொடுத்தல். திருமுழுக்கின் வழியாக இறைவனிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட கொடைகளையும் வரங்களையும் தாலந்துகளையும் பிறருடைய வாழ்விற்காகவும், வளர்ச்சிக்காகவும் பயன்படுத்த முன்வரவேண்டும். இதற்கான அருளை வேண்டிடப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம்: எசாயா 62:1-5**
மணமகன் மணப்பெண்ணில் மகிழ்வதுபோல உன் கடவுள் உன்னில் மகிழ்வார்.

**பதிலுரைப் பாடல்:**
அனைத்து மக்களுக்கும் ஆண்டவரின் வியத்தகு செயல்களை அறிவியுங்கள்.

**இரண்டாம் வாசகம்: 1 கொரி 12:4-11**
தூய ஆவியார் தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் கொடைகளைப் பகிர்ந்தளிக்கிறார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா அல்லேலூயா! நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் மாட்சியை நீங்கள் அடையும் பொருட்டே நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக அவர் உங்களை அழைத்தார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்: யோவான் 2:1-12**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

பிறருடைய மீட்புக்காகவும், ஆன்மீக வளர்ச்சிக்காகவும் அயராது உழைக்கும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் இறைமக்கள் அனைவரும் தாம்பெற்ற திருமுழுக்கின் அழைத்தலுக்கேற்ப இறையரசின் வளர்ச்சிக்காக என்றும் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

வாழ்வின் ஒவ்வொரு கணமும் என் கடவுளின் மாட்சியைக் காணமாட்டேனா? என ஏங்கித் தவிக்கும் நாம் கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பதுபோல பிறருடைய துன்பத்திலும், கண்ணீரிலும் பங்கெடுப்பவர்களாகவும் கிறிஸ்துவுக்கு ஏற்புடைய வாழ்வை வாழ்பவர்களாகவும் விளங்கிட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

மரியாள் இயேசுவின் மீது கொண்டிருந்த நம்பிக்கைபோன்று, நாமும் அவரில் நம்பிக்கை கொள்ளவும், யாருக்கு என்ன நடந்தாலும் நமக்கு என்ன என்று கருதாமல் அடுத்தவர் துன்பத்தில் உதவிடும் கரங்களாக நாம் செயல்படவும் இறைவனிடம் இருந்து பெற்றுக்கொண்டதை பிறருக்கு கொடுத்து மகிழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 3வது ஞாயிறு (27.01.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 3வது வாரத்தில் இறைவனின் திருப்பீடத்தை சூழ்ந்து வந்திருக்கும் இறை நெஞ்சங்களே! இன்றைய நாளில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள முதல் வாசகத்திலும் நற்செய்தி வாசகத்திலும் திருநூலில் பிரிக்கப்பட்டு வாசிக்கப்பட்டது என்று தெளிவாக சொல்லப்படுகிறது. உயிருள்ள இறைவார்த்தைகள் அடங்கிய ஏட்டுச் சுருள் வாசிக்கப்பட உயிரற்ற, உணர்வற்றிருந்த மனித இதயங்கள் உயிர்பெறுகின்றன. அன்று இறைவார்த்தைகளைக் கேட்ட மக்கள் மனம் வருந்தி அழுதனர். ஆனால் இன்று திருப்பலியில் வாசிக்கப்படும் உயிருள்ள இறைவார்த்தைகளை கேட்டு சிந்திக்கின்றோமா? என எண்ணிப் பார்க்க வேண்டும். அன்பின் அரசை அமைத்திடும் இறைவார்த்தைக்கு என்றும் செவிமடுக்கவும், இறைவார்த்தையின் முழு நிறைவான இயேசுவை உணர்ந்திடவும், எமது குடும்பங்களில் திருநூலை போற்றவும் பொருள் புரிந்து வாசிக்கவும் ஆவியின் அருட்கொடையால் புதுப்பிக்கப்பட்டு வாழவும் இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம்: நெகே 8:2-6, 8-10**
எஸ்ரா கடவுளின் திருச்சட்டத்தை உரக்க வாசித்தார். மக்களும் அதைப் புரிந்து கொண்டனர்.

**பதிலுரைப் பாடல்:**
ஆண்டவரே உம் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன.

**இரண்டாம் வாசகம்: 1 கொரி 12:12-30**
நீங்கள் கிறிஸ்துவின் உடல், ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புக்கள்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா அல்லேலூயா ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் என அறிவிக்கவும், ஆண்டவர் என்னை அனுப்பினார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம்: லூக் 1:1-4, 4:14-21**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திருநூலை மையமாகக் கொண்டு திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் ஆகிய அனைவரும் எல்லோரையும் வாழ வைக்கும் திருநூலை வாஞ்சையுடன் அறிவிக்கவும், மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்ட உழைக்கவும் தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

மலையென மனத்துயர் வரும்போது மனபலம் தருவது இறைவார்த்தை வாழ்வில் திருப்புமுனை வேண்டுமெனில் எம் கரங்கள் திருநூலை ஏற்கவேண்டும். இதை உணர்ந்தவர்களாக இறைவார்த்தையின் முழுவடிவான இயேசுவைபோல திருநூலைப் போற்றவும் பொருள்புரிந்து வாசிக்கவும் அதன் படி வாழவும் வரமருள வேண்டுமென்று...

நாம் இறைவார்த்தை வழி நின்று சிந்தித்து செயல்படுவதன் மூலம் எமது நாட்டில் நிலவுகின்ற அசாதாரண நிலைமைகள் நீங்க எம்மாலும் உதவிட முடியும் என்பதை உணர்ந்து நாம் செயல்படவும், எமது குடும்பங்களில் திருநூலை புரிதலோடு வாசித்து தியானிக்கவும் வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

## விவிலிய வாசிப்பு

## பழைய ஏற்பாடு




**இ. படைப்பின் தொடக்கமும் முடிவும்.**

அழகான ஒன்றை அழகில்லாத ஒன்றுடன் ஒப்பிட்டு நோக்கும்போது அழகின் தன்மை இன்னும் அதிகமாகத் தோன்றும், இந்த வகையில் இறைவன் ஒவ்வொன்றாக இறைவன் படைத்து அது முழுமையடைந்த நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உலகின் அழகு முழுமையாக விளங்கும்.

படைப்புச் செயலுக்கு முன் உலகு இருந்த நிலையை விவிலிய ஆசிரியர் இவ்வாறு விளக்குகிறார். மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது (இ.ச 32:10, எரே 5:23, தொ.நூ 2:5) உருவமற்று வெறுமையாய், ஆழமாய், அச்சம் தருவதாய், அழகில்லாமல் இருந்த உலகம் இறைவனின் வார்த்தையால், படைப்பாற்றலால் எவ்வளவு அழகானதாய் மாறியது என்பதையும் விவிலிய ஆசிரியர் சொல்கின்றார். கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. (வச 31)

### IV. யாவே பாரம்பரிய விவரிப்பில் அழகியல்

குருக்கள் பாரம்பரியம் போல் உலகு, பிரபஞ்சம் ஆகியவற்றைப் பற்றி கூறாமல், யாவே பாரம்பரியம் மனிதனுக்கு மிக அண்மையில் இருப்பவை, அவசியமானவை பற்றி மிகத் தெளிவாக, விவரமாக அனைத்துச் சிறு தரவுகளுக்கும் முக்கியத்துவம் அளித்து உலகப் படைப்பு பற்றி விவரிக்கின்றது.

நாம் மேலே குறிப்பிட்டதுபோல இப்பகுதியில் இறைவனுக்கு மனிதப் பண்பேற்றல் என்னும் உத்தி பயன்படுத்தப்படுகிறது. அதன்படி இறைவன் மனிதர்கள் செயல்படுவதுபோல செயல்படுவதாகக் காட்டப்படுகிறது. உதாரணத்திற்கு, மண்ணால் மனிதனை உருவாக்குகையில் குயவராக, தோட்டம் அமைக்கிற தோட்டக்காரராக, ஆடை தைக்கிறவராக, மாலை நேரத்தில் தோட்டத்தில் நடை பயில்பவராக, குற்றத்தை விசாரித்து நீதி வழங்குகிற நீதிபதியாக விவிலிய ஆசிரியர் இறைவனைக் காட்டுகின்றார். (தொ. நூ 2:7, 8:21, 8, 9, 19) இவற்றுள் இறைவன் எவ்வாறு ஒரு கை தேர்ந்த கலைஞனாக ஆணையும், பெண்ணையும் படைக்கிறார், அதில் எவ்வாறு அழகியல் வெளிப்படுகிறது எனக் காண்போம்.

**அ. மண்ணும் மனிதனும்.**

மண்ணுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவை யாவே பாரம்பரியம் உணர்த்துகிறது.

1. ஆதாம் என்னும் எபிரேயப் பெயர் மண் என்பதைக் குறிக்கும் ஆதமா என்னும் சொல்லிலிருந்து வருகிறது. எனவே, ஆதாம் என்பதற்கு மண்ணால் ஆனவன் என்பது பொருள்.
2. மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதனுக்கு (2:7) அந்த மண்ணைப் பண்படுத்துவதே கடமையாக அளிக்கப்படுகிறது. (தொ.நூ 2:5, 15). இறுதியில் அவன் இந்த மண்ணுக்கே திரும்புகிறான். (தொ.நூ 3:19) எனவே மண்ணே, பூமியே மனிதனின் தொட்டிலாக, வாழ்விடமாக, கல்லறையாக இருக்கிறது. மனிதன் பூமியோடு ஓர் இணக்கமான முறையில் பிணைக்கப்பட்டுள்ளான்.

**ஆ. உயிர் கொடுத்தவன் தேவன்**

அதே நேரத்தில் மனிதன் இறைவன் உருவாக்கிய வெறும் மண் பொம்மையல்ல. அவன் தன்னில் இறைவனின் உயிர்மூச்சைப் பெற்றதனால் உயிருள்ளவனாக, துடிப்புள்ளவனாக வாழ்பவனாகிறான் (தொ.நூ 2:7, எசே 37:9, தி.பா 104:29). எனவே, மனிதன் ஒரே நேரத்தில் மண்ணையும், இறை மூச்சையும் கொண்டிருக்கிற, இரு எதிர் துருவங்களை ஒருங்கே கொண்டிருக்கின்ற உன்னதமாக கலைப்படைப்பு (இத்தகைய ஓர் உருவகத்தை 2 கொரி 4:7இல் பவுலடியார் பயன்படுத்துகிறார். 2 கொரி 4:8, 12, 16)

இந்தக் கலைப் படைப்பான மனிதனை முதலில் படைத்த இறைவன் இதை வைக்க ஒரு தகுந்த அழகிய இடத்தைத் தேடுகின்றார். இந்தப் படைப்பு வாழத் தேவையான அனைத்துச் சூழல்களை உருவாக்குவதில் அடுத்து இறைவன் முனைப்புடன் ஈடுபடுகிறார். அந்த வகையில் ஏதேனில் தோட்டம், மரங்கள், ஆறுகள், பொன், நறுமணப் பொருள்கள், வண்ண மணிக்கற்கள், உயிரினங்கள், பறவைகள் என பலவற்றைப் படைக்கின்றார் (தொ.நூ 2:8-20; எசா 51:3, எசே 31:9,16,18, 36:35)

**இ. மனிதனுக்கு ஒத்த துணை (தொ.நூ 2:18-25)**

மனிதனுக்கு உருவையும், உயிரையும், வாழ்விடத்தையும், உணவையும் என எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றிய இறைவன், இறுதியாக அவனது உளத் தேவையையும் நிவர்த்தி செய்ய முயல்கின்றார். அதை விவிலிய ஆசிரியர் விரிவாக விவரிக்கின்றார். குருக்கள் பாரம்பரியத்தில் மானிடரைப் படைக்குமுன் தன் உள்ளத்தில் (அல்லது வானதூதருடன்) ஆலோசனை செய்து படைத்ததுபோல (தொ.நூ 1:26) இங்கும் தனக்குள்ளே மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று, அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன் என ஆலோசித்துத் தீர்மானிக்கின்றார்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..




## 2018ஆம் ஆண்டுக்கான திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்திற்கான நிதிச்சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அநுராதபுரம் | 88,000.00 |
| பதுளை | 113,759.00 |
| சிலாபம் | 691.120.00 |
| மட்டக்களப்பு | 126,832.00 |
| கொழும்பு | 2,973,592.00 |
| காலி | 123,000.00 |
| யாழ்ப்பாணம் | 316,297.00 |
| கண்டி | 409,832.00 |
| குருணாகல் | 425,831.00 |
| மன்னார் | 271,216.00 |
| இரத்தினபுரி | 216,625.00 |
| திருகோணமலை | 195,933.00 |
| மொத்தம் | 5,952,037.00/- |

தேசிய இயக்குனர்,
பாப்பிறை மறைப்பரப்புச் சபைகள்
இல. 19. பல்கம் இடம், கொழும்பு - 08,
தொபேசி / தொலை நகல் 0112685673
மின்னஞ்சல் : ndpmssrilanka@gmail.com,
இணையம் : www.pontificalmissionlk.org.

# “பிள்ளைகளே! இ
# ஒளியாகி

### பாப்பிறை மறைபரப்புச்சபைகள் தேசிய இயக்குன
### பெசில் ரொகான் பர்னாந்து அவர்களின் ஆசி

## “பிள்ளைகளே இருள் சூழ் உலகில் ஒளியாக

பிள்ளைகள் இவ்வுலகில் அபூர்வமானவர்கள் என்பதற்கினங்க, உலகை ஒன்றினைக்கும் சிறுவர்களை புதிய ஆண்டாகிய 2019ஆம் ஆண்டில் ஞாயிறு தினத்தில் புனிதராக செயற்பட “பிள்ளைகளே இருள் சூழ் உலகில் ஒளியாகிடுவோம்” என்ற கருப்பொருள் வழிகாட்டியாகவுள்ளது. கிறிஸ்து ஆண்டவரின் வாழ்வை பின்பற்றி அவர் வழி நடக்க இறைவரம் வேண்டி மன்றாடுவதோடு, “வாருங்கள் நாங்கள் புனிதர்களாகுவோம்” என்ற கருத்திற்கினங்க பிள்ளைகளின் சமூகம் தங்களுக்குள்ளே ஒரு குழுவினை அமைத்து இறைவனில் வாழ்வதற்கு அழைக்கப்படுகின்றார்கள்.

இறைவனுடன் ஆழமாக ஒன்றினைய இருள் சூழ் உலகிற்கு எதிர்காலத்தை கொடுக்கும் அணையா விளக்காக ஒளி தர திருப்பாலர் ஞாயிறு தினத்தினூடாக விசுவாசத்தின் விளக்கில் உலகம் மிளிர்வதற்கும், மறையைப் போதிப்பதற்கும், தயார்படுத்தி அனுப்புவதற்கும் உயிரூட்டம் அளிக்கின்றது.

இறைவனுடன் ஆழமாக ஒன்றிணைந்துள்ள ஒருவர் இறைவிருப்பத்தை செயற்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளான், சுதந்திரமாக தன்னை இறைவனிடத்தில் ஒப்புக்கொடுக்கின்றார்கள். இறை குரலுக்கு செவி கொடுக்க, பாவ உலகிற்குள் தன்னை அடிமையாக்காமல் காலத்தின் அடையாளத்தை அறிந்து, இறைவழிகாட்டலுக்குள் ஒன்றிணைவோம்.

உலகின் ஒளி நானே! என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார், வாழ்விற்கு வழி காட்டும் ஒளியை கொண்டிருப்பார். (யோவான்-8:12) ஒளியான எதிர்காலத்திற்கு பழக்கப்படுவதற்கு விசுவாசம் தொடர்பான கவனத்தை விசுவாசிகளின் அனுதின வாழ்க்கையை பரிசுத்தமாக்கும் ஒரு வாய்ப்பாக இருப்பதனால் நிலையான ஒரே விசுவாசத்தில் காலத்தை கடத்தலாம். சமூக, அரசியல், மற்றும் வியாபார சுழற்சியால் நடைபெறும் தற்கால சூழ்நிலையில் மனிதனின் சுய செயற்பாடுகளை நிதானமாக இறைவனுடன் ஆழமான விசுவாசத்தில் பயணம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான வழி இங்கு தெளிவுபடுத்துகிறது. ஆதனால் “இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள் உங்களுக்கு கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே”. (1தெச 5:17-18) உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை, நீர் என்னை உலகிற்கு அனுப்பியது போல, நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகின்றேன். அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகின்றேன். (யோவான் 17:17-19)

இவற்றிற்கிணங்க குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் பொறுப்பு மற்றும் கடமைகளை சரிவர செய்வதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் முயல்கின்றார்கள். காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழலில் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடரொளி உதித்துள்ளது. (மத்தேயு- 4:16)

உலகிற்கு ஒளி இறைவனே அந்த மறையினூடாக உலகை ஏற்படுத்துவதும், நற்செய்தியை உலகில் அனைத்து திசைகளுக்கும் கொண்டு செல்லுவதும், ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். உலகம் இறை வார்த்தைக்கும், இறை வார்த்தை உலகிற்கும், அத்தியவசியமான ஒன்றாகுவதுடன், காலத்தின் அடையாளத்தில் ஒன்றினைந்து விசுவாச ஒளியை மிளிர செய்வதோடு இறைவனின் நிரந்தர விசுவாசத்தையும் இறைவனின் நிரந்தர எதிர்பார்ப்பையும் இந்த சூழ்ச்சியின்



மூலம் நிறைவேற்றுவோம்.

பிள்ளைகள் இவ்வுல
பிள்ளைகள் உலகெங்கிலும்
நவீன கண்டுபிடிப்புக்கள் மு
தன்மைக்கு அனுதினம் மு
திருப்பாலராக விசுவாசத்தில்
ஒரே கதவை திறந்து தே
எதிர்காலமாக்கி வாழவும் அ
பெரியோர் பொறுப்பை ஏற்று

நாளைய தினத்தில்
மறைபரப்பாலரை சேர்த்துக்
ஒளிக்கு கொண்டு செல்ல
“ஆதியிலே தேவன் ஒளி
தோன்றிற்று”. இதனூடாக
கிடைத்தது. மனிதனுடைய
உலகம் பூராகவும் உள்ள
பின்தொடர்கின்றனர். இதன்
இராட்சியம் பண்ணுவதற்கா
போகின்றது. இதனால் பிள்
இறை பிள்ளையின் தன்மை
நிறுத்திக் கொண்டு தூய்
அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்

இலங்கையின் புனிதரா
தன்னுடைய சிறு வயதிலி
உள்ள இயேசு கிறிஸ்துவி
ஒளிமயமாக்கி புனித வாழ்
வாழ்வை கொண்டு நடாத்த
நாமும் மறைபரப்பாளரான இ
பின்பற்றி நடப்போம்.

அனைத்திற்கும்
உண்மையை பின்தொடர்
மரித்தவர்களையும் மதித்து
செயற்பட்டு, சிறந்த திருப்பால
நவீன கண்டுபிடிப்புக்கள்
எம் பிள்ளைகளின் நிலை
சந்ததிகளுக்கு சிறந்த மறை
விசேடமாக திருப்பாலர்களா
நவீன உலகை உருவாக்
நேரத்தில் வேலை செய்து,
ஏற்றலும், உண்மையின்
குணமுள்ள வாழ்வை வா
மேலும் திருப்பாலர்களாகிய
வாழ்ந்து முன்மாதிரியாக தி

### உங்களுக்கு இறை



# ...ருள் சூழ் உலகில் ...டுவோம்"


...ர் அருட்பணி
...ிச் செய்தி
...கிடுவோம்."



...கிற்கு பெரியதொரு கொடை.
... விரிவடைந்துள்ள காலத்தில்
...லம் ஏற்படும் பிரச்சினையான
...கம் கொடுப்பதனால் சிறிய
...நிலைத்திருக்க விசுவாசத்தின்
...வ இராட்சியத்தின் ஒளியை
...துதை நடைமுறைப்படுத்தவும்
... செயற்பட வேண்டும்.
... புனிதராகுவதற்கு, சிறிய
... கொண்டு இருளிலிருந்து
... பக்கத்துணையாகவுள்ளது.
... தோன்றுக என்றார். ஒளி
... முழு உலகிற்கும் ஒளி
... தீய நடத்தைகள் மூலம்
... பிள்ளைகளும் அவற்றை
... மூலம் எதிர்காலத்தை
...ன தைரியம் இல்லாமல்
...ளைகள் நீங்கள் பெற்றுள்ள
...யை சிறந்த முறையில் நிலை
...மையான வாழ்வினை வாழ
...
...ாக திகழும் புனித யோசப்வாஸ்
...ருந்து தேவநற்கருணையில்
...ன் ஒளியில் தன் வாழ்வை
...வினூடாக பரித்தியாகமான
...வரம் கிடைத்தது. அதுபோல
...இவரைப் போல் இறைவனை
...
... ஆன்ம தியாகத்துடன்
...வர்களாகவும், அனைத்து
...தர்மம் மற்றும் சாதாரணமாக
...ர்களாக திகழ முயல்வதோடு
... மூலம் அடிமைப்பட்டுள்ள
...லயை தகர்த்து எதிர்கால
...யை கொடுக்க முயல்வோம்.
...கிய உங்களுக்கு மேலும்
... வழிகாட்டுவதோடு, கால
... ஆன்ம திருப்தி, பொறுப்பை
... மூலம் நல்ல மதிப்பான
...ழ அழைக்கப்பட்டுள்ளீர்கள்
... நாம் சிறந்த முறையில்
...கழ்வோம்.

...யாசீர் உரித்தாகுக!

## திருப்பாலர் மறைப்பரப்பு ஞாயிறு – 2019 தை 27



### பாப்பிறை திருப்பாலர் சபை

1843ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் நன்சி என்னும் ஊரில் ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன் என்பவர் இச்சபையை ஆரம்பித்தார். இளம் பராயத்திலிருந்தே இயேசுவை ஆழமாக அறியவும், கிறிஸ்தவ நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும், சிறுவர்களை வழிநடத்தி அவர்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்துவதுடன், சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் பகிர்ந்து வாழும் மனப்பான்மையை இவர்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதுமே இவரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதன் வழியாக சிறுவர்களை இயேசுவின் சிறிய மறைத்தூதர்களாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார்.

# பிள்ளைகளே! இருள் சூழ் உலகில் ஒளியாகிடுவோம்.



அருட்பணி செ. எயின்சிலி றொஷான், மறைமாவட்ட இயக்குனர்,
திருப்பாலத்துவ சபை யாழ் மறைமாவட்டம்.

"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணகம் இத்தகையோருக்கே உரியது" (லூக்கா. 19:13-15) என்பது கிறிஸ்து இயேசுவின் அருள் வாக்கு. சிறுபிள்ளைகளை இவ்வாறு முதன்மைப்படுத்தி மண்ணகம் மற்றும் விண்ணகம் இத்தகைய சிறுபிள்ளைகளின் கைகளில் இருப்பதை கிறிஸ்து இயேசு சுட்டிக்காட்ட விழைகின்றார். நாளைய உலகின் படைப்புலக சிற்பிகள் சிறுபிள்ளைகளே ஆவர்.

**நல்ல நல்ல**
**பிள்ளைகளை நம்பி**
**இந்த நாடே**
**இருக்குது தம்பி**
**சின்னஞ்சிறு**
**கைகளை நம்பி**
**ஒரு சரித்திரம்**
**இருக்குது தம்பி**

என்பது கவிஞன் ஒருவனின் சிறு பிள்ளைகளின் முதன்மையை வெளிக்காட்டும் கவிதை வரிகள். இதன் ஆங்கில பொன் மொழி ஒன்று.

**"Childhood is the world of Miracle and wonder as if creation rose, bathed in light, out of the darkness, utterly new and fresh and astonishing"** எனக் கூறி கருத்தாலமிக்க-தாக்குகின்றது.

இன்றைய உலகம் பல்வேறு வகையான இருள் வலைகளுக்குள் சிக்கித் தவிக்கின்றது. ஆன்மீகம், அரசியல், அறிவியல், பொருளியல் என சமூகத்தின் அத்தனை அத்தியாயங்களும் கறைபடிந்து காட்சியளிக்கின்றது. இவற்றுக்கு மத்தியில் போதைப்பொருள் பாவனை, சமூக வலைத்தளங்களின் சீரழிவுப் பாதைகள், கல்வியில் நாட்டமின்மை, இளவயது திருமணங்கள், பாலியல் வன்முறைகள், வறுமை, பெற்றோரின் புறக்கணிப்பு, வேலைக்கு அமர்த்தப்படுதல் என சிறுபிள்ளைகளுக்கு எதிரான வன்முறைப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. அறிவியலின் சிகரத்தை தொட்டுவிட்டோம் என இறுமாப்படையினும் அந்த சிகரம் சரிவை நோக்கிச் செல்லும் அபாய சமிக்ஞைகள் தெளிவாக தெரிவதனால் எதிர்கால உலகு சூனியமாக, பயங்கரமானதாக காட்சி தருகின்றது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற அசுர வேகம் அசுரர்கள் தான் உருவாக்கி வருகின்றது. அலகை என் முன்னால் சிலுவை என் பின்னால் என பயணித்து வருகின்றோம். மனிதன் இறைவார்த்தைக்கு பதில் அப்பத்தினால் மாத்திரம் பிழைக்க முடியும் என்ற நம்பிக்கையில் நடைபயில்கின்றான். இறையியலை புறக்கணித்து உலகியலில் நாட்டம் கொண்டு லோத்தின் மனைவி போல உப்புத்தூணாயன்றி உருக்குலைந்து நிற்கின்றோம்.

இத்தகைய பேராபத்துக்களில் இருந்து உலகை மீட்டெடுத்து பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஒளியின் வடிவங்களாக திகழும் சிறுபிள்ளைகளாகிய உங்கள் கைகளில் தான் உள்ளது. நாங்கள் சிறு பிள்ளைகள் என நீங்கள் ஒதுங்கி விட முடியாது. தேக்கங்காட்டு மரங்களை விட தீக்குச்சி சிறியது தான். ஆனால் ஒரு தீக்குச்சி பெருங்காட்டையே எரித்து சாம்பலாக்குகின்றது. இருளடைந்து செல்லும் உலகை ஒளிமயமாக்கும் தீக்குச்சி சுடர்கள் நீங்கள். உலகின் சூரியர்களாக, சந்திரர்களாக, நட்சத்திரங்களாக ஒளிர்ந்து பூமிப்பந்தை ஒளியூட்ட வேண்டியவர்களும் நீங்களே.

திருப்பாலத்துவ சபையின் ஊடாக திரு அவையின் படிப்பினைகயைப் பெற்று வல்ல சுடர்களாக நீங்கள் வலம் வருவீர்களாயின் மனித மனங்களை மூடியுள்ள கருமேகங்கள் கலைக்கப்பட்டு மனவானில் பொற்கதிர்கள் பரவத் தொடங்கும்.

புனித சிறுவர் ஞாயிறு "பிள்ளைகளே! இருள் சூழ் உலகில் ஒளியாகிவிடுவோம்" என்ற கருப்பொருள் தாங்கி உங்களை அழைத்து நிற்கும் இவ்வேளையில் அழைப்பின் குரலுக்கு ஆனந்தமாய் செவிமடுத்து செயற்பட்டு ஒளியின் பிள்ளைகளாக மாசற்ற குழந்தைகளாக மாண்புடன் பயணிப்போம்.

"நீங்கள் உலகின் ஒளி" என கிறிஸ்து இயேசு கூறிய நற்செய்தியை நாள்தோறும் நினைவில் நிறுத்தி விடும், சமூகமும், நாடும், உலகும் சுபீட்சம் அடைய சிறுபிள்ளைகளாகிய நீங்கள் பெத்தலகேமில் உதித்த வால்வெள்ளியாக பிரகாசித்திட வல்ல இறைவனின் வரம் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# திருமறையின் வரலாற்றுச் சுருக்கம்

### 2. மோசேயும் வனாந்தர வாழ்வும்

எபிரேயரின் ஆண் குழந்தைகள் எல்லாம் கொல்லப்பட்டு ஆற்றில் வீசப்பட்டார்கள். ஆனால் ஒரு குழந்தை மட்டும் ஒரு பேளையில் வைத்து ஆற்றிலே மிதக்க விடப்பட்டது.அக்குழந்தையே மோசே. பார்வோனின் மகள் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது மோசே வைக்கப்பட்ட பேளை ஆற்றிலே மிதந்து வந்தது. அவள் அக்குழந்தையை எடுத்து அரண்மனைக்குக் கொண்டுவந்து வளர்த்தாள். மோசே பல கலைகளையும் கற்று வலிமைமிக்க வீரனாக வளர்ந்தார். ஒருநாள் எகிப்தியன் ஒருவர் தன் இனத்தவன் ஒருவரைக் கொலைசெய்தான். இதைக்கண்ட மோசே அந்த எகிப்தியனைக் கொலை செய்தார். இதனால் அவர் அரண்மனையை விட்டு வனாந்தரத்துக்குத் தப்பி ஓடவேண்டியதாயிற்று, சில காலம் அங்கேயே அவர் மறைவாக வாழ்ந்தார்.

ஒருநாள் இவர் சீனாய் மலைச் சாரலில் மந்தை மேய்த்துக் கொண்டிருந்தபோது மலையின் உச்சியில் எரியும் முட்செடியில் வானகத் தந்தையைச் சந்தித்தார். அவர் மோசேயிடம் என் மக்கள் எகிப்து நாட்டில் மிகவும் நசுக்கப்படுகிறார்கள். அவர்களின் அபயக் குரலை தான் கோட்டு அங்கு சென்று அவர்களை விடுவித்து நம்மிடம் அழைத்து வரவேண்டும் என்றும் அவரை எகிப்துக்கு அனுப்பிவைத்தார். வானகத் தந்தையின் கரம் மோசேயுடன் இருந்ததால் மோசே பார்வோன் முன்னிலையில் பத்துப் புதுமைகளைச் செய்தார். மோசே வழியாக வானகத் தந்தை செயற்பட்டதைக் கண்ட பார்வோன் இஸ்ராயேல் மக்களைப் போகவிட்டான். மோசே அவர்களைச் சீனாய் மலைக்குக் கூட்டிக்கொண்டு வந்தார். அவர் வழியாக வானகத் தந்தை இஸ்ரயேலருக்குப் பத்துப் போதனைகளை ஒழுங்குகளாகக் கொடுத்தார். இவர்கள் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் வாழ்ந்தார்கள். வானகத்தந்தை இவர்களுக்கு ஆகாயத்தில் இருந்து மன்னாவையும் பாறையில் இருந்து நீரையும், காடைக் குருவிகளின் இறைச்சியையும் உண்ணக் கொடுத்துப் பராமரித்தார்.

இவர்கள் வனாந்தரத்தில் கூடாரம் அடித்து தங்கியிருந்தார்கள். தங்களின் கூடாரங்களின் மத்தியில் வானகத் தந்தைக்கும் இவர்கள் ஒரு கூடாரத்தை அமைத்தார்கள். இக்கூடாரத்தின் உள்ளே அவர்கள் வாக்குத்தத்தப் பேளை ஒன்றையும் வைத்தார்கள். இப்பேளையுள் பத்துக்கற்பனைப் பலகையும், ஆரோனின் கோலும், மன்னாவும் இருந்தன. இப்பேளை வழியாக வானகத் தந்தை தன் மக்களோடு தங்கி வாழ்ந்தார். கூடாரத்தில் அவருக்குப் பணிபுரிய மோசே லேவியின் குடும்பத்தாரை நியமித்தார். மோசேக்கு வயதானதும் இஸ்ரயேலரை வழிநடத்த யோசுவா என்ற நடுவரை நியமித்தார். முதிர்ந்த வயதில் மலை உச்சிக்கு வானகத் தந்தையைக் காணச்சென்ற மோசே திரும்பவரவில்லை. அவருக்கு என்ன ஆனது என்று இன்றுவரை எத்தகவலும் இல்லை. அவர் வானகத் தந்தையிடம் சென்றுவிட்டார் என்பதே நம்பிக்கை

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# விடுகதைகள்

1. கறுப்புக்காகம் ஓடிப்போச்சு... வெள்ளைக் காகம் நிக்குது...
2. வளைஞ்சு நெளிஞ்சு ஆடும்... தண்ணீர் குடித்தால் சாகும்...
3. மழையோடு வருகிற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது...
4. எண்ணெய் வேண்டா விளக்கு, எடுப்பார் கைவிளக்கு...
5. வித்தில்லாமல் விளையும், வெட்டாமல் சாயும்...
6. அம்மா பின்னிய நூலை அவிக்க முடியாது....
7. நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன்...
8. பல அடுக்கு மாளிகையில், இனிப்பு விருந்து..
9. உடல்கொண்டு குடுத்திடுவான், ஒன்றாக இணைப்பான்...

**விடைகள்**

1. உளுந்து, 2. நெருப்பு, 3. ஈசல், 4. மெழுகுவர்த்தி,
5. வாழை, 6. இடியாப்பம், 7. மணிக்கூண்டு,
8. தேன்கூடு, 9. ஊசி.

# கண்டுபிடியுங்கள்!

**குட்டீஸ்! இப்படங்களில் 6 வித்தியாசங்கள் உண்டு. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.**



**கண்டுபிடித்த விடையை சரிபார்க்க 15ம் பக்கத்திற்கு வரவும்**



# தாயன்பு தனியன்பு



களைப்பின் மிகுதியால் ஒரு தாய் தன் குழந்தையின் அருகில் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது இல்லத்தை அடுத்துச் செல்லும் நெடுஞ்சாலையில் பலத்த இரைச்சலுடனும், அதிர்ச்சியுடனும் லாரிகள் சென்று கொண்டிருந்தன. என்றாலும் அவள் விழித்தெழவில்லை. வீட்டின் மறுபக்கத்தில் செல்லும் புகைவண்டியின் இரைச்சலிலும் அவள் அயர்ந்து தூங்கினாள்.

அடுத்து சில மணி நேரம் மழை சோ வென்று கொட்டியது. பக்கத்து வீடு பலத்த மழையினால் புயலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பெரும் சத்தத்துடன் இடிந்து விழுந்தது. அந்த இரைச்சலிலும் அவள் அசையவில்லை. இடியும் மின்னலும் தொடர்ந்து முழங்கின. இருப்பினும் அவள் நிம்மதியாகத் தூங்கினாள். ஆனால் அருகில் படுத்திருந்த குழந்தை சிறிது நெளிந்து மென்மையான குரலில் அம்மா எனச் சொல்லி அழ ஆரம்பித்தது. உடனே அக்குழந்தையை அன்னையின் கரம் அணைத்துத்தேற்றியது. தாயன்பு, தனியன்பு. இறையன்பு இதைவிடச் சிறந்தது.

“பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமா? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்து விட்டாலும் நாம் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டோம்” (எசா 49:15)




# விவிலியப் பகுதி



## மத்தேயு நற்செய்தி

### அதிகாரம் 1 முதல் 14 வரை

1. மத்தேயு நற்செய்தி எம்மொழியில் எழுதப்பட்டது? **அரமேய மொழி.**
2. இந்நூல் எழுதப்பட்ட காலக்கட்டம் எது? **யூதச்சங்கங்கள்கிறிஸ்தவர்களைதுன்புறுத்தியகாலக்கட்டம். (முன்னுரை)**
3. திருச்சபையில் கற்பிக்க வேண்டிய இன்றியமையாத பண்புகள் என இந்நூலில் கூறப்படுபவை எவை? **அறம், மன்னிப்பு, நல்லுறவு (முன்னுரை)**
4. கிரேக்கமொழி பேசும் யூதர் நிறைந்திருந்த நகரம் எது? **அந்தியோக்கியா (முன்னுரை)**
5. யூத கிறிஸ்தவர்களுக்கு இந்நூலில் அழுத்தமாகக் கூறப்படும் கருத்து யாது? **எதிர்பார்த்திருந்த மெசியா இயேசுதான் என்பதுவும், அவர் இறைமகன் என்பதுவும் (முன்னுரை)**
6. திருச்சட்டத்தின் நிறைவு யார்? **கிறிஸ்து**
7. இந்நூலில் எவற்றின் அடிப்படைகள் பிணைந்து கிடக்கின்றன? **கிறிஸ்தியல், திருச்சபையியல், நிறைவுகால இயல் (முன்னுரை)**
8. மத்தேயு நற்செய்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் மூதாதையரின் பட்டியல் யாருடையது? **தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல் (1:1)**
9. ஒபேதின் பெற்றோர் பெயர் என்ன? **போவாசு, ரூத்து (1:5)**
10. எக்கோனியா என்பவரின் மறுபெயர் என்ன? **யோவாக்கிம் (1:11 அடிகுறிப்பு)**
11. யோசேப்பின் தந்தை பெயர் என்ன? **யாக்கோபு (1:16)**
12. மெசியா என்னும் எபிரேயச் சொல்லின் கிரேக்க மொழிபெயர்ப்பு என்ன? **கிறிஸ்து (1:16 அடிக்குறிப்பு)**
13. மரியாவின் கணவர் யோசேப்பு எத்தகையவர்? **நேர்மையாளர் (1:19)**
14. யோசேப்பின் கனவில் தோன்றியவர் யார்? **ஆண்டவரின் தூதர் (1:20)**
15. இம்மானுவேல் என்பதன் பொருள்? **கடவுள் நம்முடன் இருக்கிறார் (1:23)**

**தொடரும்**

**சிறுவர்களே! மாசி மாதம் 4ம் திகதி எமது நாட்டின் சுதந்திர தினம். எனவே நீங்கள் சுதந்தர தினத்தைப்பற்றிய உங்களது ஆக்கங்கள், வரைதல், கவிதைகள், போன்றவற்றை இம்மாதம் 28ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்புங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஞானஒளி,**
**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் :**
**cgnanaoli@yahoo.com**

## மாணவர் ஒளி



## கலங்காதே நண்பா!



# உன்னோடு ஒரு நிமிடம்

நாமே உன்
கடவுள்

உன்னைப் படைத்தவரும்
நாமே - உன்னை
உருவாக்கியவரும் நாமே
தாயின் கருவறையில்
இருந்து உனை
வெளிக்கொணர்ந்தவரும்
நாமே - உன் தாயிடம்
பால் குடிக்கையில்
உன்னை பாதுகாத்த-
வரும் நாமே

எல்லாத் திசைகளையும்
இருளே கவ்விக்
கொண்டபோது
தூர விண்மீனாய்
துளிர்த்ததும் நாமே

பிசுபிசுத்துப்போன உன்
திரிகளை அகற்றி - என்
ஆழ்மன உணர்வு பற்றி
ஒளியை ஏற்றியதும்
நாமே

உன்னையே நோக்கி
வரும் எல்லா
அம்புகளையும்
எதிர்கொண்ட
கேடயமும் நானே!

சில சமயங்களில் நீ
அழுகிறதை நான்
கேட்டிருக்கின்றேன்
உன் அழுகைக் குரல்
என் காதுகளுக்கு
எட்டியது.

உனது கதறல் என்
செவிகளுக்கு எட்டியது.
“என் இறைவா!
என் இறைவா! ஏன்
என்னைக் கைவிட்டீர்?”
என்று தேம்பித் தேம்பி
அழுததை நான்
கேட்டேன.

“என் இறைவா!
ஏன் என்னை விட்டு
வெகு தொலைவில்
உள்ளீர்? என்னைத்
திரும்பிப் பாரும்” என்று
கதறுவதையும் கேட்டேன்.

“என் இறைவா!
எனக்கு விடுதலை
தாரும் என்னைப்
பாதுகாத்தருளும்” என்று
நீ மன்றாடுவதையும்
நான் கேட்டேன்.

“என் இறைவா! நீர்
என்னை ஒதுக்கிவிட்டீரா?
என்னை நொறுக்கி
விட்டீரா? என் மீது
சீற்றம் கொண்டுள்ளீரா?”
என்று கலங்குவதையும்
பார்த்திருக்கின்றேன்.

நீ படும் துன்பங்களை
என் கண்களால்
கண்டேன் - நீ படும்
துயங்களை நான்
அறிவேன்

உனக்கு இழைக்கப்படும்
கொடுமைகளையும் நான்
அறிவேன், உன்னுடைய
வேதனைக்குக் காரணம்
என்னவென்றும் எனக்குத்
தெரியும். எதற்காக
அழுகிறாய் என்பதும்
எனக்குத் தெரியும்.

கவலைப்படாதே!
இன்று நான் உனது
வேதனையினின்று
விடுதலை தருவேன்
சமாதானமாயிரு
அமைதியாயிரு என்னை
நம்பு.

என்மீது உன்
நம்பிக்கையை வைத்திரு
எனக்குச் செவிமடுத்து
நான் சொல்வதைக்
கேள்.

# கலங்காதே நண்பா ஏனெனில் நீ விலையேறப் பெற்றவன்

# பொது அறிவு

- எந்த நாட்டில் அதிகமாக கார்களைப் பயன்படுத்து-கிறார்கள்? - அமெரிக்கா
- டென்மார்க்கில் ஒரு நாளில் எத்தனை லிட்டர் பால் கறக்கும் கறவை மாட்டை தரமான மாடு என்று அழைக்கிறார்கள்? நூறு லிட்டர்.
- உலகின் மிக உயரமான கல் கோபுரம் எது? குதுப்மினார்
- சேகுவேரா பிறந்த நாள் எது? ஆனி 14, 1929
- டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை எது? அன்னம்
- முதல் உலகின் புத்தகமில்லா நூலகம் என்ற பெருமையைப் பெற்ற நூலகம் எது? டெக்சாசில், அமெரிக்கா
- கார்களுக்குப் பதிவு எண் வழங்குவதை அறிமுகப்-படுத்திய நாடு எது? ஸ்வீடன்
- சீனாவின் புனித விலங்கு எது? பன்றி
- அலுவலகக் குறிப்புப் புத்தகங்களில் ஆரஞ்சு நிறப் புத்தகம் பயன்படுத்தும் நாடு எது? நெதர்லாந்து
- வெற்றிலையின் தாயகம் எது? மலேசியா
- நதிகள் இல்லாத நாடு எது? சவுதி அரேபியா
- மக்கள் தொகை குறைவாக உள்ள நாடு எது? வாடிகன்
- பெரிய கிறிஸ்தவ தேவாலயம் எது? புனித பேதுரு தேவாலயம்.
- உலகிலேயே நீளமான மலைத்தொடர் எது? ஆண்டீஸ் மலைத்தொடர் (தென் அமெரிக்கா)
- மிகப்பெரிய கடல் பறவை எது? ஆல்பட்ராஸ்
- மக்கள் தொகையில் பெரிய நகரம் எது? ஷாங்காய், சீனா
- உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையம் அமைந்துள்ள இடம் எது? பீஜிங் சர்வதேச விமான நிலையம், சீனா
- உலகிலேயே மிக உயரமான அலுவலகக் கட்டிடம் உள்ள இடம் எது? தாய்வான்
- உலகிலேயே உயரமான சிலை எது? சர்தார் வல்லபாய் பட்டேலின் “ஒற்றுமையின் சிலை” 597 அடி



# விதை தரும் வாழ்க்கைப் பாடம்

தாவரங்கள் தன் இனத்தைப் பெருக்கிக்கொள்ள தம்முள்ளே உருவாக்கும் ஒரு தாவர அங்கமே விதை. விதை விதைக்கப்பட்டு, முளைத்து தன் இனத்தை உருவாக்குகிறது. விதைத்தவன் தூங்கினாலும் விதைகள் தூங்குவதில்லை. விதை புதைந்தாலும் மண்ணில் சாகாமல் போராடி, மீண்டும் தளிர்விட்டு வெளிவந்து வளரும். விதை முளைக்கவில்லையெனில் அதற்கு விதை மட்டும் பொறுப்பல்ல. அது சிலநேரம் விழுந்த இடம், சூழல் இவைகளும் காரணமாகும். ஒரு மரத்தில் உருவாகும் விதையைக் கூட எண்ணிவிடலாம். ஆனால் ஒரு விதையினால் உருவாகும் மரங்களை எண்ணிவிட முடியாது.

பூத்துக் குலுங்கும் பூக்களைப் பார்ப்போம். விதை முதலில் முளைவிட்டு இலை, கிளை, அரும்பு, பூ, விதை என மலர்கின்றது. மலர்கள் மட்டுமா? செடி, கொடிகள், மரங்கள் அனைத்துக்கும் ஒரு மூல விதையாக, ஒரு விதையிலைத் தாவரம், இரு விதையிலைத் தாவரமாக இருக்கிறது. எந்த விதையாக இருந்தாலும் அது முளைக்கும்போது கூர்ந்து கவனித்தால் அதிலிருந்து நமது வாழ்க்கைக்கான ஆழமான பாடங்களை அது கற்றுத் தருகிறது.

ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு விதம். இணக்கமான மண், ஈரப்பதம், தட்பவெப்பநிலை, இம்மூன்றும் விதைகள் முளைப்பதற்கான சூழல்கள். சூழல்கள் பக்குவமாக இருந்தால் எல்லாமே பக்குவமான நிலைக்கு வந்து, பக்குவப்பட்ட நிலத்தில் மேலோட்ட-மாக விதைகளைத் தூவினாலே முளைக்கும். ஆனால் பக்குவப்படுத்தாத களர் நிலத்தில் ஆழ விதைத்து, உரமிட்டு, நீர் பாய்ச்சினாலும் அந்த விதைகள் முளைப்பதில்லை. “அழுதுக்கிட்டிருந்தாலும் உழுதுக்-கிட்டே இருக்கணும்” என்பது முதியோர் சொல்.

மண் சார்ந்த வாழ்க்கை நமது வாழ்க்கை. மண்ணற்ற பூமியையும், பெண்ணற்ற பூமியையும் நினைத்துப் பார்க்கவே முடியாது. இரண்டுமே நேசிப்புக்குரியவை. நேசிப்புக்கு மகத்துவம் அதிகம். மண்ணைப் போலவே மண்ணிலிருந்து விளைந்த விதையும் நேசிப்புக்குரியதே. நாம் விதைகளை நேசிப்போம். மண்ணில் விதையை ஊன்றியதும் அது நன்றாக ஊறி முதலில் வெளிவருவது அதன் வேர் பகுதிதான். ஆணிவேர், செடி ஊன்றி நிமிர்ந்து நின்று சுற்றிலும் தொகுப்பு செடிக்குத் தேவையான உணவுப்பொருட்களை வேர்ப்பகுதியில் சேர்த்து வைத்திருக்கும். சிலவகை தாவரங்களில் விழுதுகளே வேர்களாக இருக்கும். மனிதர்களாகிய நாமும் நமது வாழ்வில் வளர்ச்சியைத் தொடங்கும் போது உயரே வந்துவிடவேண்டும் என்று நினைக்காமல், முதலில் தன்னை நிலைப்படுத்தி தனக்குப் பிடித்த துறை எது என்பதைத் தெரிவு செய்து அதில் ஆணிவேரைப் போல் ஆழப்பதிய முயற்சிப்போம். நமது வாழ்வின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியின்போதும் தன்னை வலுவாக்கி அடிப்படை வலுவில்லாத எதுவும் நீண்ட காலம் நிலைத்திருப்பதில்லை என்பதை உணர்ந்து, வளர்ச்சிக்கு முதல் கட்டமே அடிப்படையான உறுதி என்று மண்ணில் மறைந்திருக்கும் வேர் நமக்குக் கற்றுத் தருகின்ற விவேகமான பாடம் இது.

மத் 13:8 நல்ல நிலத்தில் விழுந்த விதை நூறு மடங்கு, அறுபது மடங்கு, முப்பது மடங்காக விளைச்சலைக் கொடுத்தன. சில நல்ல விதைகள் நிலத்தில் ஊன்றியதுமே முளைத்துவிடும். சில விதைகள் நாள்கணக்கில் நிலத்தில் மக்கிய பின்பே நிதானமாக முளைக்கும். விதைக்குத் தக்க உறக்க நிலை வந்து உதவும்போது அந்த விதை முளைக்கத் தொடங்கும். விதையைப் போலவே நமது மனித மனமும் மூடப்பட்ட விதையாகவே கடைசிவரை இருந்து விடாமல், விதையினுள் இருக்கும் உயிர்த்தன்-மையை கிளைத்தெழுந்து முளைவிட்டு செடியாக வளர செய்வோம். நமது மனமும் விதையின் ஓடுகளைப் போலவே தேவையில்லாத சங்கதிகளால் மூடிவிடுகிறோம். நமது மனங்களில் களையப்பட வேண்டியவற்றைக் கண்டறிந்து தக்க நேரத்தில் களைந்துவிட ஆற்றல் வெளிப்படும்.

ஒரு நிலத்தைப் பண்படுத்தி தானியங்களை உற்பத்திச் செய்பவன் விவசாயி. அவர் தன் நிலத்தில் மா, புளி, அரளி என்ற மூன்று விதைகளை அருகருகே ஊன்றுகிறார். மூன்றும் நன்றாக வளர்ந்து பலன் தரும்போது மாமரம் உடலுக்கும், நாவுக்கும் இனிமைத் தரும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# விசுவாசத்தைக் கற்பதற்கேற்ற முதலிடம் குடும்பம்

பெற்றோர் ஒவ்வொருவரும் தங்கள் வார்த்தை-யாலும் வாழ்வு எடுத்துக்காட்டாலும், குழந்தைகளுக்கு விசுவாசத்தை வழங்கவேண்டும் என அழைப்புவிடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் திருமுழுக்கு விழாவான தை 13 ஞாயிறன்று, வத்திக்கானின் சிஸ்டைன் சிற்றாலயத்தில் 27 குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கும் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விசுவாசத்தை கற்பதற்கும், அதற்கு சாட்சியாக விளங்குவதற்கும், குழந்தைகளுக்கு கிடைக்கும் முதல் இடம் குடும்பம் என மறையுரையாற்றினார். "உங்கள் விசுவாச வாழ்வைக்கொண்டு குழந்தைகளுக்கு விசுவாசத்தை வழங்குங்கள். தம்பதியருக்கு இடையே நிலவும் அன்பையும், வீட்டில் உள்ள அமைதியையும், அங்கு இயேசுவின் இருப்பையும் காணும் குழந்தைகள், விசுவாசத்தைக் கற்றுக்கொள்வார்கள் என தன் மறையுரையில் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.



தம்பதியரிடையே முரண்பாடான கருத்துக்கள் எழுவது இயல்பே, ஆனால், குழந்தைகள் முன்னிலையில் சண்டையிடாமல் இருப்பது அவசியம் எனவும் உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விசுவாசத்தை குழந்தைகளுக்கு வழங்கவேண்டியது, தம்பதியரின் கடமை எனவும் வலியுறுத்தினார்.

# மறைசாட்சிகளின் புண்ணிய வாழ்வுப் பண்புகள் ஏற்பு



புனிதர் மற்றும் முத்திப்பேறுபெற்ற நிலைகளுக்கு உயர்த்துவதற்கென இடம்பெற்ற ஒரு புதுமையையும், புண்ணிய வாழ்வுப் பண்புகளையும், ஏற்றுக்கொண்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருப்பீட, புனிதர்நிலை பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ பெச்சு அவர்கள், தை 15, செவ்வாயன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து, 17 பேர் பற்றிய விவரங்களைச் சமர்ப்பித்தார். சுவிட்சர்லாந்து நாட்டின் La Pierrazவில் 1815ம் ஆண்டு புரட்டாதி 8ம் திகதி பிறந்த முத்திப்பேறுபெற்ற, அசிசி நகர் புனித பிரான்சிசின் மூன்றாம் சபையைச் சார்ந்த Margarita Bays அவர்களின் பரிந்துரையால் ஒரு புதுமை இடம்பெற்றுள்ளது. Margarita Bays அவர்கள், சுவிட்சர்லாந்து நாட்டின் Siviriezவில் 1879ம் ஆண்டு, ஆனி 27ம் நாளன்று காலமானார். பிரான்சிஸ்கன் சபையின் இறைஊழியர் Maria del Carmen மற்றும் அவரோடு சேர்ந்து 13 அருள்சகோதரிகள், 1936ம் ஆண்டில், இஸ்பெயின் நாட்டில் விசுவாசத்திற்காகக் கொல்லப்பட்டனர்.

போலந்து நாட்டில் 1872ம் ஆண்டு பிறந்து, 1936ம் ஆண்டில் காலமான, அதிதூதர் மிக்கேல் அருள்சகோதரிகள் சபையை ஆரம்பிக்க உதவிய Anna Kaworek, Puerto Rico நாட்டில் 1892ம் ஆண்டு பிறந்து, 1973ம் ஆண்டில் காலமான, நோயாளர் பராமரிப்பு சபையின் அருள்சகோதரி Maria Soledad Sanjurjo Santos ஆகிய இரு இறைஊழியர்களின் புண்ணிய வாழ்வுப் பண்புகளையும், திருத்தந்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

# புனித ஜோன் போஸ்கோ உயிர்ப்பு ஞாயிறு முகத்துடன் பணியாற்றியவர்...



சலேசிய சபையை ஆரம்பித்த புனித ஜோன் போஸ்கோ அவர்கள், மலர்ந்த முகத்துடன், தெளிவான திட்டங்களைச் செயல்படுத்தியவர் மற்றும், துணிச்சலுடன் தீர்மானங்களை எடுத்தவர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சலேசிய சபை குடும்பத்தினருக்குக் கூறியுள்ளார்.

"நற்செய்தியின் மகிழ்வும், (Evangelii gaudium), தொன் போஸ்கோவும்" என்ற தலைப்பில், சலேசிய அருள்பணியாளர் அந்தோனியோ கரியெரோ அவர்கள் எழுதிய நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய இளையோருக்கு, சலேசிய சபையினர் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

புனித ஜோன் போஸ்கோ அவர்கள், கவலை தோய்ந்த புனித வெள்ளி முகத்துடன் பணியாற்றவில்லை, மாறாக, ஒவ்வொரு நாளும், அவர் எதிர்கொண்ட ஏராளமான வேலைகள் மற்றும் இன்னல்களுக்கு மத்தியில், எப்போதும் மகிழ்ச்சியான, உயிர்ப்பு ஞாயிறு முகத்துடன் பணியாற்றினார் என்றார், திருத்தந்தை பிரான்சிஸ். இதனால், புனித ஜோன் போஸ்கோவை, நற்செய்தியின் மகிழ்வை, துணிச்சலுடன் அறிவித்தார் எனக் கூறலாம் என்று கூறியத் திருத்தந்தை, இதையே, அவரின் முதல் மாணவராகிய, புனித தொமினிக் சாவியோவுக்கும் பரிந்துரைத்தார் என்றும் கூறினார்.

**இளையோரும் சலேசிய சபையினரும்**

புனித ஜோன் போஸ்கோ, 19ம் நூற்றாண்டில், இத்தாலியின் தலைநகர் மற்றும், தொழிற்சாலை நகரமாக வளர்ந்துவந்த தூரின் நகரில், சமுதாயத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்துவந்த மக்கள் மத்தியில், உயரிய கிறிஸ்தவ நெறிமுறைகளை வாழ்ந்து காட்டினார், இது, எண்ணற்ற இளையோரை ஈர்த்தது என்றுரைத்த திருத்தந்தை, ஜோன் போஸ்கோவின் சலேசியர்கள், இன்றைய இளையோருக்கு, எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்வியாளர்களாகிய சலேசிய சபையினர், எதிர்காலம் இன்றி, சமுதாயத்தின் விளிம்பு நிலையில் வாழ்கின்ற இளையோரை அரவணைப்பவர்களாகவும், வலைத்தளங்களிலும், செய்தித்தாள்களிலும் ஒவ்வொரு நாளும் வெளிவருகின்ற செய்திகள் மத்தியில், அழகான மற்றும் உண்மையான செய்திகளை வழங்குபவர்-களாகவும் செயல்பட வேண்டும் என்றும், திருத்தந்தை கூறினார்.

சலேசியர்கள், இயேசு கிறிஸ்துவிடமிருந்து பிறந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துபவர்கள் மற்றும் இயல்பாகவே நேர்மறை எண்ணங்களைக் கொண்டிருப்-பவர்கள் என்றுரைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தின் மத்தியில், எளிமையான வாழ்வால், நற்செய்திக்குச் சான்றுகளாக வாழுமாறு கேட்டுக்கொண்டார்.

தை 10, வியாழனன்று சலேசிய குடும்ப ஆன்மீக நாள்களை ஆரம்பித்துள்ள அச்சபையினர், நற்செய்தியின் மகிழ்வு என்ற திருத்தந்தையின் திருத்தூது அறிவுரைத் தொகுப்பிலிருந்து, தங்களின் மேய்ப்புப்பணி கல்விக்கு, கருத்துக்களை எடுத்து சிந்தித்து வருகின்றனர்.

# 1923ம் ஆண்டுக்குப்பின், துருக்கியில் கிறிஸ்தவக் கோவில்

துருக்கி நாட்டின் இஸ்தான்புல் மாவட்டத்தில் சிரிய ஆர்த்தடாக்ஸ் ஆலயம் புதிதாகக் கட்டப்படவு-ள்ளதென மாவட்ட அரசுத்துறை, தை 8, செவ்வாயன்று அறிவித்ததாக, ஆசிய செய்தி கூறியுள்ளது.

Bakirkoy என்ற இடத்தில் கட்டப்படும் இக்கோவில் 700 பேர் அமரக்கூடிய வகையில் உருவாக்-கப்படும் என்றும், இக்கோவிலின் கட்டுமானப் பணிகள் ஈராண்டுகளில் நிறைவடையும் என்றும் Bakirkoy நகர மேயர் Bulent Kerimoglu அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

துருக்கி நாடு, 1923ம் ஆண்டு, ஒரு குடியரசாக மாறியபின், கட்டப்படும் முதல் கிறிஸ்தவக் கோவில் இது என்பதும், இக்கோவிலைக் குறித்த செய்தியை, 2015ம் ஆண்டு, பிரதமராக இருந்த Ahmet Davutoğlu அவர்கள் அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கன.



சிரியாவில் போர் தொடங்கியதிலிருந்து, அந்நாட்டிலிருந்து வெளியேறிவரும் கிறிஸ்தவர்களில் ஆயிரக்கணக்கானோருக்கு துருக்கி குடியரசு, புகலிடம் அளித்து வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது







"அன்பு, புறக்கணிப்பைச் சகித்துக் கொள்ளாது, மாறாக, அன்பு பரிவிரக்கமுள்ளது. அன்பு என்பது, பிறரோடு ஒத்துப்போகும் விதத்தில், ஒருவர் தனது இதயத்தை வைப்பதாகும்"

"அமைதியை உருவாக்குவது, நம்முடன் அமைதியை உருவாக்க விழையும் இறைவனைப் பிரதிபலிப்பதாகும்: அவர் தன் மகனை நம்மிடையே அனுப்பினார், நம்மை மன்னித்துள்ளார்"

"இவ்வுலகு சார்ந்த எண்ணங்களை, நம்பிக்கை சார்ந்த எண்ணங்கள் வெல்கிறது: என் அருகில் இருக்கும் சகோதரர், சகோதரிகளிடம் கடவுள் இருக்கிறார் என்பதே அந்த நம்பிக்கை"

"கடினமானச் சூழல்களைச் சந்திக்கும் வேளையில், கண்ணீர் வடிக்க அஞ்சவேண்டாம்: கண்ணீர் துளிகள், வாழ்வை வளப்படுத்துகின்றன. பரிவினால் உருவாகும் கண்ணீர், இதயங்களையும், உணர்வுகளையும் தூய்மையாக்குகிறது"

"சிலுவையின் மறைபொருளைப் புரிந்துகொள்ள, முழந்தாள்படியிட்டு செபிப்பதோடு, கண்ணீர் சிந்துவதும் உதவியாக இருக்கும். நாம் சிந்தும் கண்ணீர், இந்த மறைப்பொருளுக்கு அருகே நம்மை அழைத்துச் செல்லும்"

"கண்ணீரால் கழுவப்பட்ட கண்களைக் கொண்டு மட்டுமே, வாழ்வின் ஒரு சில கடினமான எதார்த்தங்களைக் காணமுடியும்"



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 6:9)

## குழுவாக வேண்டுவோம்

பகுதி – 11

ஒவ்வொருவரின் செப வாழ்விலும் மூன்று தளங்கள் இருக்கின்றன. அவை; தனியாகச் செபித்தல், குழுவாக அல்லது குடும்பமாகச் செபித்தல், திருச்சபையாகச் செபித்தல். இந்த மூன்று தளங்களிலும் செபிக்கின்றவர்களே முழுமையான விசுவாசிகள். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால், அது நிறைவற்ற செபமாகவே இருக்கும்.

மனிதர்கள் தீவுகளல்லர், சமூகப் பிராணிகள். கூடி வாழவே படைக்கப்பட்டவர்கள். காலங்காலமாகவே குழுக்களாக, குடும்பங்களாக, சமூகங்களாகவே வாழ்ந்து பழகியவர்கள். இத்தன்மை ஆன்மீகத்திலும், செபத்திலும் வெளிப்படுகிறது.

### குழு வேண்டலின் நன்மைகள்

**1. இயேசுவின் உடனிருப்பு :**

இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ, அங்கே அவர்களிடையே நான் இருக்கின்றேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 18:20) என்பது இயேசுவின் வாக்குறுதி. குழுச் செபத்தில் இந்த வாக்குறுதி நிறைவேறுகிறது. இயேசு தமது இருப்பை உறுதி செய்கிறார். அந்த உடனிருப்பை செபக்குழுவினர், அல்லது குடும்பத்தினர் அனுபவித்து உணரலாம்.

**2. வேண்டுதல் அருளப்படும் :**

குழுவாகச் செபிக்கும் போது அனைவரின் மனமும் ஒன்றுபடுகிறது. ஒருமித்த வேண்டுதலை ஆண்டவர் கேட்கிறார். உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார் (மா் 18:19) என்பதுவும் இயேசுவின் வாக்குறுதியே.

**3. உறவின் வளர்ச்சி :**

செபிக்கும்போது இறைவனோடு உள்ள உறவு ஆழப்படுகிறது. அதுபோலவே, குழுவாகச் செபிக்கும்போது குழுவிலுள்ள உறுப்பினர்களிடையே உள்ள உறவும் ஆழப்படுகிறது. சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது (தி.பா 133:1) என்னும் திருப்பாடல் வரிகளைப் போல, சகோதரர்கள் ஒன்றுபட்டுச் செபிப்பதும் நல்லதும், இனியதுமான ஒரு செயல். அதன் மூலம் ஒருவர் மற்றவருடைய ஏக்கங்கள், எதிர்பார்ப்புகளை அறியவும், தேவைகளை உணரவும் வாய்ப்புக் கிடைக்கிறது. நட்பு மலர்கிறது.

**4. நம்பிக்கை ஆழப்படுகிறது :**

சேர்ந்து செபிக்கும்போது ஒருவர் மற்றவரால் விசுவாச ஊக்கம் பெறுகிறோம். சாட்சியப் பகிர்வுகள் தனிப்பட்டவர்களின் வாழ்வில் இறைவன் ஆற்றிய அரும்பெரும் செயல்களைப் பிற உறுப்பினர்களுக்கு அறிக்கையிடுகின்றன. இவ்வாறு அவர்கள் நம்பிக்கையில் வளர்கின்றனர். அதுபோல, குறிப்பிட்ட தேவைக்காக உறுப்பினர் ஒருவர் நம்பிக்கையோடு செபிக்கும்போது பிறரையும் அந்த விசுவாச ஆர்வம் தொற்றிக்கொள்கிறது.

**5. ஊக்கமும், உற்சாகமும் :**

தனியாகச் செபிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் சரியான ஆர்வம் தேவை. ஆனால், குழு செபத்தில் ஆர்வம் குறைந்த ஒருவரும், பிறரது ஆர்வத்தால் தூண்டப்பட்டு செப ஆர்வத்திற்குள் நுழையும் அனுபவத்தைப் பலரும் பெற்றிருப்பர். குழு செபத்தின் சிறந்த நன்மை இது. ஆர்வமற்றோருக்கும் ஆர்வம் தூண்டும் அருமருந்து குழு செபம்.

**6. கற்றுக்கொள்ளல் :**

குழுவாகச் செபிக்கும்போது ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது. செபிப்பது எப்படி, இறைப்புகழ்ச்சி, மன்றாட்டுகள், பரிந்துரை மன்றாட்டுகள் சொல்வது எப்படி என்பனவற்றை செபக்குழுவில் கற்றுக்கொள்ளலாம். இதை மட்டுமல்ல, நல்ல செப மனநிலை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் கற்றுக்கொள்ள முடியும்.

**7. தன்னலம் குறைந்து, பொது நலம் வளர்கிறது :**

குழுவாகச் செபிக்கும்போது பிறரின் தேவைகளுக்கும், ஏக்கங்களுக்கும் செவிமடுக்கிறோம். உலகினரின் துன்ப, துயரங்களை அறிகிறோம். பரிந்துரை மன்றாட்டுகளில் நம்மைவிட அதிக தேவைகளில் உழல்வோரைப் பற்றி எண்ணிப்பார்க்கிறோம். இதனால் நம்முடைய தேவைகளைப் பற்றிய கவலை குறைந்து, பிறர்மீது அக்கறை அதிகரிக்கிறது. பொதுநலம் வளர்கிறது.

**8. தலைமைப் பண்பு வளர்கிறது :**

செபக் குழுக்களை வழிநடத்துபவர்கள் தன்னம்பிக்கையில் வளர்ந்து, தலைமைப் பண்பில் உயர்வதை நாமே காண்கின்றோம். குழுவை வழிநடத்தும் தன்மையில் துலங்கி, பிற துறைகளிலும் தலைமைப் பண்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

**9. குழுக்களின் சமூக வலிமை :**

குழுக்களாகச் செயல்படுவதில் சமூக வலிமை இருப்பதை உணர்ந்து, தன்னார்வ, சிறு குழுக்களாகச் செயல்படுவதை ஊக்குவிக்கிறது. செபக் குழுக்கள் ஒரு பங்கில் நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும் ஆற்றல்மிக்கவை. நன்கு வழிநடத்தினால் சமூக மற்றும் ஆன்மீக மாற்றங்களை இக்குழுக்கள் கொண்டுவரும்.

**10. இயேசுவைப் பின்பற்றுகிறோம் :**

இயேசு தனியாகச் செபித்ததுடன், தம் சீடர்களுடன் சிறு குழுவாகச் செபித்ததையும், அவர்களுக்குக் கற்றுக்கொடுத்ததையும் நற்செய்தி நூல் வழி அறிகிறோம் (லூக் 11:1-2). தமக்கு மிகவும் நெருக்கமான யோவான், பேதுரு, யாக்கோபு மூவருடன் இணைந்து, சில சிறப்பான வேளைகளில் இயேசு செபித்தார் (லூக் 9:28, 10:21). எம்மாவு நோக்கிச் சென்ற இரு சீடர்களுடன் இயேசுவும் இணைந்து செபித்தபோதுதான், அவர்களின் அகக் கண்கள் திறக்கப்பட்டன (லூக் 24:30).

இயேசு கற்றுக்கொடுத்தவாறே, திருத்தூதர்கள் தொடர்ந்து செபித்து வந்தனர். இயேசுவின் விண்ணேற்புக்குப் பிறகு, இயேசுவின் தாய் மரியாவுடன் இணைந்து செபித்து வந்தனர் என்பதைத் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து (1:14) அறிகிறோம். தொடக்கத் திருச்சபையிலும் இப்பழக்கம் தொடர்ந்து, துறவற சபைகளில் இன்றுவரை நிலவிவருகிறது.

### செபக்குழுக்களில் தோன்றக்கூடிய இரு குறைகள்

**1. பரிசேயத்தனம் :**

ஒரு சில கிறிஸ்தவ சபையினரிடமிருந்து தொற்றும் நோய் இது. தாங்கள் மீட்கப்பட்டவர்கள், உயர்ந்தவர்கள், மற்றவர்களோ பாவிகள் என்று எண்ணும் மனநிலை. இத்தகைய மனநிலையையும், இவர்களின் செபத்தையும் இறைவன் புறக்கணிக்கிறார் (லூக் 18:9-14) என இயேசு தெளிவாகக் கற்பித்துள்ளார்.

**2. போட்டி மற்றும் பிளவு மனநிலை :**

ஒன்றுபட்டு உழைக்கும் தன்மை குறைந்து, குழுவைவிட்டு விலகிச் செல்லுதல், புதிய குழுவை உருவாக்குதல் போன்றவை அலகையின் தூண்டுதலால் நிகழ்பவை. யார் பெரியவர் என்னும் மனநிலை தம் சீடரிடையே இருக்கக்கூடாது (லூக் 22:24-26) என்பதுவும் இயேசுவின் கண்டிப்பான கட்டளை. இத்தகையக் குறைகளைக் களைந்து, நிறைவான வகையில் எங்கே செபக்குழுக்கள் இயங்குகின்றனவோ, அந்தப் பங்குகளில் தூய ஆவியின் ஆற்றலும், கனிகளும், வரங்களும் நிறைந்து விளங்கும் என்பதில் ஐயமே இல்லை. நமது செப வாழ்வு நிறைவடைய வேண்டுமானால், நாமும் சிறு குழுவாக, குடும்பமாக இணைந்து செபிப்போமாக!

## உண்மை ஊழியர்கள்!

ஓர் அலுவலக மேலாளர் நிறுவனத்திற்குள் நுழையும்போது, அலுவலர்களில் சிலர் வெட்டிக்கதை பேசிக்கொண்டிருப்பார்கள். சிலர் அமைதியாக தாம் இருக்குமிடத்தில், கருமமே கண்ணாக, கடமையே உயிர்மூச்சாக, செல்போனில் படம் பார்த்தக் கொண்டிருப்பார்கள். அலுவலக மேலாளரைக் கண்டவுடன் அவசரம் அவசரமாக தங்கள் இருப்பிடம் சென்று வேலையைக் கவனிப்பார்கள். இது மேலாளருக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் மாலையில் அனைத்து ஊழியர்களையும் தன் அலுவலா அறைக்கு அழைத்தார். "நான் வரும்போதெல்லாம் நீங்கள் வேலை செய்யாமல் நேரத்தை வீணாக்குகிறீர்கள். இதை மாற்றுவதற்கு யாராவது நல்ல யோசனையைத் தெரிவிக்க வேண்டும். நல்ல யோசனை சொல்பவருக்குப் பரிசு உண்டு. உங்கள் கருத்துக்களை எழுதி வாசலில் உள்ள அட்டைப் பெட்டிக்குள் இடவேண்டும்" என்றார்.

மறுநாள் காலையில் அட்டைப் பெட்டிக்குள் கருத்துக்கள் எழுதப்பட்ட கடிதங்கள் கிடந்தன. எடுத்து வாசித்துப் பார்த்தால் எல்லோருமே ஒரே கருத்தைத்தான் எழுதியிருந்தார்கள். "சார்.... நீங்கள் ரப்பர் செருப்புக்களை அணிந்து வருவதால், நீங்கள் வருவதை எங்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள் அந்தக் கால முனிவர்கள் அணிந்திருந்த மரக்கட்டைச் செருப்புக்களை அணிந்து வந்தால் சப்தம் கேட்டு நாங்கள் உஷாராகி வேலையில் ஈடுபடுவோம்"



# திருச்சபையின் திருவிளக்கு
# தாமஸ் அக்வினாஸ்

## திருநாள் தை 28



அரச பரம்பரையைச் சேர்ந்த அக்வினோ, தியோடோருக்கு 1225ஆம் ஆண்டு மகனாக தாமஸ் அக்வினாஸ் பிறந்தார். ஏழ்மை வாழ்வு நடத்தும் சாமிநாதர் சபையில் சேர வந்தவரை சபைத் தலைவர்கள் நேப்பிள்ஸ் கலாசாலையில் படிக்கவைத்தனர். சொத்து, சுகம் துறந்து எளிய வாழ்வு நடத்தும் இவரை மீட்டுச்செல்ல குடும்பத்தினர் முயன்றனர். உரோமைக்கு இவர் பயணமாகும்போது குடும்ப சேவகர் இடைமறித்து இவரது இல்லம் சேர்த்தனர். அங்கு இவரது தனி அறையில் ஒரு விலைமாதை அனுப்பி இவரது துறவு வாழ்வுக்கும் புனித குறிக்கோளுக்கும் முட்டுக்கட்டை போட்டனர். கெடுக்க வந்தவளை இவர் கொள்ளிக்கட்டை கொண்டு விரட்டி அடித்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின் பாலுணர்வு சம்பந்த சோதனை எதுவும் அவருக்கு வந்ததில்லை என்று புனித கிரகோரி கூறுகிறார். எனினும் வீட்டை விட்டு வெளியே போகமுடியாத நிலையில், தனது சகோதரியின் துணையால் அநேக புத்தகங்களைப் பெற்று இல்லத்திலே படித்து அறிவுத் திறமையை வளர்த்தார். கடவுள் கருணையால் தன் சகோதரர்களுக்குத் தெரியாமல் ஒரு கூடை வழியாக மாளிகையிலிருந்து கீழே இறங்கி திரும்ப சாமிநாதர் சபைக்கு வந்தார்.

பின்னர் புனித பெரிய ஆல்பர்ட்டிடம் மாணவராகச் சேர்ந்தார். அமைதியான இவர் சுபாவம் கண்டு இவரை ஊமை மாடு என்று கேலி செய்தனர் சக மாணவர்கள். இதைக் கேட்டு "திருச்சபை கொள்கைகளைப் பற்றி இவர் கத்தும்போது அக்குரலொலி உலகம் முழுவதும் எதிரொலி தரும்" என்று ஆல்பர்ட் பரிந்து பேசினார். அது இறைவாக்கு. அதனால்தான் அக்வினாஸ் எழுதிய "இறையியல் சுருக்கம்" என்ற புத்தகத்தை அறியாத எந்த குருவும் உண்மையான இறையியலாளர் அல்ல என்பது யாவரும் ஏற்கும் உண்மையாகிவிட்டது. இப்புத்தகம் விவிலியத்துடன் ஒப்ப நோக்கத்தக்கது.

முதுகலைப் பட்டம் பெற்று அதற்குப் பின் குருப்பட்டம் 1250ல் பெற்றார். மதமகாரா என்ற கலாசாலையில் பிரான்சிஸ் சபையாரும் சாமிநாத சபையாரும் பாடம் நடத்தக்கூடாது என்று சட்டம் தீட்டப்பட்டபோது, 14ம் லூயிஸ் அரசரது நடவடிக்கையும் இவரின் கட்டுரையும் சட்டத்தின் தவறைச் சுட்டிக்காட்டின. மீண்டும் கலாசாலையில் இரு சபையினருக்கும் ஆசிரியப்பணி வழங்கப்பட்டது. சில தத்துவவாதிகள் தவறான கொள்கையைப் பரப்ப முயன்றனர். அவர்களுக்கு, "நண்பர்களே, சிறுபிள்ளைகளிடமோ விபரம் தெரியாதவர்களிடமோ உங்கள் படிப்பைக் காட்டாமல் என்னிடம் காட்டுங்கள். உங்களது தவறுடன் போரிடுகிறேன், இல்லையேல் உங்கள் அறியாமைக்கு மருந்து கொடுக்கிறேன்" என்று பதிலடி கொடுத்தார்.

தன்னை பேராயராக நியமிக்க திருத்தந்தை முயற்சிப்பதை அறிந்து எனது பணி எழுத்துப் பணியும், போதகப் பணியும் என்று தாழ்மையுடன் கூறி தன்னை விடுவித்துக் கொண்டார். எனவேதான் உலகத்திற்கு அரிய சொத்தாக இவரது இறையியல் சுருக்கம் நமக்குக் கிடைத்துள்ளது.

தீவிரமாக தனது பாடக் குறிப்புக்களைத் தயார் செய்துகொண்டிருந்த வேளையில் வேறொரு இல்லத்திலிருந்து வந்த ஒரு சாமானிய சகோதரர் இவரையும் தன்னைப்போன்ற சாமானியன் என நினைத்து அலுவலக பணியை முன்னிட்டு தன்னைப் பல இடங்களுக்கு இட்டுச் செல்ல வேண்டுமென்று ஆணையிட்டார். ஒரு பியூன்போல அவருக்கு தொண்டு செய்தார். பின்பு இவரது நிலை அறிந்து, வந்தவர் தன் செயலுக்காக வெட்கப்பட நேர்ந்தது.

தனது இல்ல வளாகத்தில் தீவிர ஆலோசனையுடன் நடந்து கொண்டிருந்தார் புனிதர். குதிரை பறக்கிறது வந்து பாரும் என்று உடன் சகோதரர்கள் கூறினர். வெளியே வந்து பார்த்தார். "பொய் சொல்லி உம்மை மூடனாக்கி விட்டோமே" என்று சிரித்தனர். சகோதரர்கள் பொய் சொல்லியத்தைப் பார்க்கிலும் தான் முட்டாளாகியது ஒன்றும் பெரிதல்ல என்று கூறி அவர்கள் அழைத்தலுக்கு ஏற்ப உத்தமதனத்தில் வளராதது கண்டு கண்டித்தார்.

பாடுபட்ட சுரூபம் முன் செபித்த வேளையில் இயேசு தோன்றி, "என்னைப்பற்றி நன்றாக எழுதியுள்ளாய். தாமஸ் என்ன வெகுமதி வேண்டும்?" என்றார். "உம்மைத்தவிர எதுவுமே வேண்டாம் ஆண்டவரே" என்றார் புனிதர்.

"எங்கிருந்து இவ்வளவு ஞானம் உமக்குக் கிடைத்தது? ஞானம் அளித்த நூலகத்தை எனக்குக் காட்டும்" என்று ஒருவர் கேட்க, பல அறைகளைக் கடந்து சிறு ஆலயம் ஒன்றில் புகுந்து அங்கு ஓரத்தில் ஒதுங்கியிருந்த சிலுவையைக் காட்டி "இதோ, இதில் தொங்குகிறாரே, இவரிடமிருந்துதான் என் ஞானம் ஊற்றெடுத்தது" என்றார்.

1273ல் மார்கழி 6ல் பலிபூசையின் பரவசமானார். அதிலிருந்து எழுதுவதை நிறுத்தினார். ஏன் என்று கேட்க? "பரவசம் அருளிய ஞானத்துடன் இதுவரை நான் எழுதியதை ஒப்பிடும்போது எனது எழுத்துக்கள் வைக்கோலுக்குச் சமம்" என்றார். அவர் அப்படி கூறினாலும் இவ்வைக்கோலுக்குச் சமானமாக இறையியல் இதுவரை எவரும் எழுதியதில்லை என்று எவரும் ஒத்துக்கொள்வர். ஏறக்குறைய பெரிய புத்தகங்களாக 60 எழுதியுள்ளார்.

1274ல் நடந்த பொதுச்சங்கத்தில் பங்குகொள்ள திருத்தந்தையால்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..




# அருமருந்தாகும் அதிமதுரம்...!

இனிப்பு, புளிப்பு என அறுசுவைகளின் பிரிவுகளைச் சுவை மொட்டுக்கள் நமக்கு அறிவித்திருக்கும். அதையும் தாண்டி அந்தச் சுவைகளுக்குள் இருக்கும் பிரிவுகளை உணர்ந்திருக்கிறீர்களா..? நாவூறச் செய்யும் இனிப்புச் சுவையின் பிரிவை அறிந்துகொள்ள, அதிமதுரத்தைச் சுவைத்துப் பாருங்கள். இனிப்புச் சுவையிலும் வெவ்வேறு பரிமாணங்கள் இருப்பது தெரியவரும்.

இதன் வேரை வாயிலிட்டுச் சுவைக்க, வித்தியாசமான இனிப்புச் சுவை தொண்டையினூடே ஆவியாய்க் கீழிறங்குவதை உணர முடியும். அதிமதுரத்தின் இனிப்பு நீண்ட நேரம் நாவிலும் தொண்டையிலும் நிலைத்திருந்து, எச்சில் சுரப்பை அதிகரித்து, நாவறட்சியை அகற்றும்.

தனது பெயரிலேயே இனிப்பைக் கொண்டிருக்கும் அதிமதுரம், மானிடர்களுக்காக இயற்கை உயிர்கொடுத்த "மதுரப் பெட்டகம்". குரலில் சிறிதும் பிசிறு இல்லாமல், மதுரமான ஒலியை வழங்க உதவும் அதிமதுரம், பித்த, கப நோயாளர்களுக்கான கசப்பில்லா இன்சுவை மருந்து! சீன மருத்துவத்தில் "முதன்மை மருந்து" எனும் அந்தஸ்து அதிமதுரத்துக்கு உண்டு!

### பெயர்க் காரணம்:

அதிங்கம், மதுகம், அட்டி ஆகியவை இதன் வேறுபெயர்கள். இனிப்புச் சுவை அதிகம் இருப்பதால், "அதிமதுரம்", "மதுகம்" போன்ற பெயர்களும் உண்டு இதற்கு! "இனிப்பு வேர்" என்பதைக் குறிக்கும் விதமாக, "லிகோரைஸ்" (Liquorice) எனும் பெயர் இதன் வேருக்கு உண்டு.

### உணவாக:

அதிமதுரத்தை நீரிலிட்டுக் கொதிக்கவைத்து, கொஞ்சம் பனங்கற்கண்டு, மிளகுத் தூள் சேர்த்து காலையில் பானமாகப் பருக, உங்கள் குரலுக்குக் குயிலும் அடிமையாகும். நன்னாரியைத் தண்ணீரில் ஊறவைத்து சர்பத் தயாரிக்கும்போது, அதிமதுர வேரையும் சேர்த்துக்கொள்ள பலன்கள் இரட்டிப்பாகும். இதன் வேர்க்குச்சிகள் இனிப்பு மிட்டாயாக வெளிநாடுகளில் பிரபலமடையத் தொடங்கியிருக்கின்றன. சர்க்கரை நோயாளர்கள், செயற்கை இனிப்பூட்டி-களுக்குப் பதிலாக, இயற்கை இனிப்பூட்டியான அதிமதுர-த்தைப் பயன்படுத்தலாம். சைனஸ் பிரச்சினை, ஒற்றைத் தலைவலி, தலைபாரம் ஏற்படும்போது சோம்பு கொதிக்க வைத்த நீரில், அதிமதுரத் தூளைக் கலந்து பருகலாம். இனிப்புச் சுவையுடன் உடலை வளமையாக்கும் தன்மை இருப்பதால், இனிப்பு வகைகளில் சர்க்கரைக்கு மாற்றாக அதிமதுரத்தைச் சிறிதளவு முயலலாம்.

### மருந்தாக:

அதிமதுரத்தின் சாரங்கள் வயிற்று மென்படலத்தின் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து, வயிற்றுப் புண்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதாக உறுதிப்படுத்துகிறது



ஆய்வு. இரைப்பை நோயாளர்களில் சுருங்கியிருக்கும் மூச்சுக் குழாய்த் தசைகளை விரிவடையச் செய்யும் செய்கை இதன் வேதிப்பொருளுக்கு இருக்கிறது.

செல்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, சில வைரஸ்களின் வீரியத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் அதிமதுரத்துக்கு இருப்பதாக ஆராய்ச்சி முன்மொழிகிறது. வலிப்பு நோய்க்கான மருந்தாக இதைப் பயன்படுத்தும் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### வீட்டு மருந்தாக:

அதிமதுரம், அக்கரகாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம் ஆகியவற்றைப் பொடித்து நாட்டுச் சர்க்கரை, தேன் கலந்து செய்யப்படும் "அதிமதுர ரசாயனம்"பருவமழைக் காலத்துக்கே உரித்தான மருந்து. கீச்..கீச்.. எனக் குரலுடைந்து பேசுபவர்களுக்கும் கம்பீரக் குரலை விரைவில் வழங்கும். புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்கள், அந்த உணர்வை மறக்கடிக்க, சிறிது அதிமதுரத் துண்டை மெல்லலாம். வறட்டு இருமல் இடைவிடாமல் ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும்போது, அதிமதுரம், மிளகு, கடுக்காய்த் தோல் ஆகியவற்றைப் பொடி செய்து, சிறிதளவு எடுத்து வாயில் அடக்கிக்கொள்ள வறட்சி காணாமல் போகும்.

அதிமதுரப் பால், அதிமதுரச் சூரணம் ஆகியவை சித்த மருத்துவத்தில் முக்கியமான மருந்துகள். கசப்புச் சுவைமிக்கக் கூட்டு மருந்துகளில் இனிப்பைக் கொடுக்கவும், சுவை தத்துவ அடிப்படையிலும், அதிமதுரம் சேர்க்கப்படுகிறது. கொதிக்கும் நீரில் இதன் வேரை ஐந்து நிமிடம் ஊறவைத்து, அதில் எலுமிச்சைச் சாறு அல்லது தேன் கலந்து சுவைமிக்க பானத்தைப் பருகலாம்.

"கண்ணோய் உன்மாதம் விக்கல்வலி வெண்குட்டம்" எனும் அதிமதுரத்துக்குச் சொந்தமான பாடல், மன நோய்களுக்கும் இதைப் பயன்படுத்தலாம் எனும் குறிப்பை வழங்குகிறது. வேர் ஊறிய நீரில் வாய்க்கொப்பளிக்க, வாய்ப்புண் மறையும்.

குளிர்ச்சித்தன்மை கொண்ட அதிமதுர வேரை தைலங்களில் சேர்க்க, கூந்தல் வளர்ச்சியை அதிகரிப்பதோடு, இளநரையையும் கட்டுப்படுத்தும் என்பதை "அதிமதுரம் அவுரி ஆலம்விழுது அறுகு அடர்ந்த முடி ஆக்கும்" எனும் மூலிகைக் குறள் தெரிவிக்கிறது. இதன் இலையை அரைத்து உடலில் பூசிக்குளிக்க வியர்வை நாற்றம் மறையும். சுளுக்கு ஏற்பட்ட இடங்களில், விளக்கெண்ணெய்யைத் தடவி, அதன் மீது இதன் இலையை வைக்க விறுவிறுப்புத் தன்மை ஏற்பட்டு தசை இளகுவதை உணர முடியும்.

## 01 குறுங்கால...

ஈற்றில் 80% விரிவுரைகளுக்கு பங்குபற்றியோர்க்கு சான்றிதழ் வழங்கப்படும். இயேசுவைப்பற்றி அறிய ஆவல் கொண்ட அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

**அருட்தந்தை றெஜினோல்ட் லூசியன் அமதி**

**பொறுப்பாளர் – 0718299151**

**திருவாளர் சகாயராஜ்**

**ஒழுங்கமைப்பாளர் 077 – 7134775**

## 07 விவிலிய வாசிப்பு

விலங்குகள், பறவைகள், கால்நடைகள் ஆகியவற்றை இறைவன் நல்லதெனக் கண்டாலும் (தொ.நூ 1:31) அவை அவனுக்கு ஒத்த துணையாகிவிட முடியாது (தொ.நூ 2:20). மாறாக அவற்றிற்கு அவன் தலைவனாகத்தான் இருக்க முடியும் (பெயரிடுதல், அவற்றின் மீது அதிகாரம் கொண்டிருப்பதைக் குறிக்கும்). இங்கு ஒத்த துணை எனும்போது நாம் அவனைப் போலவே என்னும் அர்த்தத்தில் அல்ல, மாறாக முழுமையாக்குகிற, இணைந்து முழுமையாக்கவல்ல என்னும் பொருளில்தான் குறிப்பிடுகின்றோம். அவனுக்கு ஒத்த துணை கிடைக்கும் வரையில் அவன் முழுமையடைவதில்லை. ஒத்த துணையைப் பெற்றதும் அவன் பெறுகின்ற முழுமை அவனது பாடலில் வெளிப்படுவதைக் காணலாம். (தொ.நூ 2:23)

இறைவன் பெண்ணைப் படைக்கிற நிகழ்வையும் (தொ.நூ 2:21-25) ஏதோ மருத்துவமனையில் நடக்கிற அறுவைச் சிகிச்சை போலவோ, மனித உடலின் விலா எலும்புகளைப் பற்றி விவரிப்பதாகவோ பார்க்கக்கூடாது. மாறாக, ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கும் தொடர்பை, நெருக்கத்தை வெளிப்படுத்தும் செயல்பாடாகக் காணவேண்டும். விலா எலும்பு மனிதனின் பக்கத்தில் இருப்பதுபோல அவர்கள் இருவரும் ஒருவர் பக்கத்தில் ஒருவராக இருக்க வேண்டியவர்கள். பெண் ஆணை ஆட்டிப்படைக்காதிருக்க அவனது தலையினின்று அவன் படைக்கப்படவில்லை. ஆணுக்கு அவள் அடிமையாகிவிடாதபடி அவனது பாதத்திலிருந்தும் அவள் படைக்கப்படவில்லை. மாறாக அவள் அவனுக்குச் சமமானவள், இணையானவள், அவனது பாதுகாப்புக்கும், இதய அன்புக்கும் சொந்தமானவள் என்பதற்காக அவனது விலாவிலிருந்து, இதயத்திற்கு அருகில் இருந்து படைக்கப்படுகிறாள். இதை உணர்ந்து இருவரும் ஒருவர் ஒருவரைப் புரிந்து, அன்பு செய்து வாழ்வதில்தான் திருமணத்தின் முழுமை, அமைதி, மற்றும் நெருக்கம் அடங்கி இருக்கிறது. இதுதான் படைப்பு விவரிப்பில் இருக்கிற அழகியலில் எல்லாம் உயர்ந்த அழகியல், உள அழகு. இந்த அழகு அமைகிறபோது மனிதன் ஆனந்தக் கூத்தாடுகிறான். உலக வரலாற்றின் முதல் காதல் பாட்டை இசைக்கின்றான். இனி இவர்கள் இருவரும் ஒரே உடலாய், ஒரே முழுமையாய் இருப்பார்கள். இதுதான் இயற்கையில் இறைவன் படைத்த உன்னத அழகு.

**முடிவுரை:**

தொடக்கநூலின் முதல் இரு அதிகாரங்களிலும் அழகு எனும் வார்த்தை அதிகம் காணப்படாவிட்டாலும் விவிலிய ஆசிரியர் அழகைத் தனது விவரிப்பில் அழகாகக் கொணர்கின்றார். அழகை மேலும் பார்த்து, நுகர்ந்து, தொட்டு உணர்கின்றதாக, புலன்களை மகிழ்விக்கின்ற ஒன்றாக மட்டுமல்ல, மாறாக அதை விட உயர்ந்ததாக 1. இறை விருப்பம் நிறைவேறுவது. 2. ஒழுங்குமுறை, அறநெறிப்படி, சட்டங்களுடன் இயைந்த வாழ்வு, அன்பு, இனிமையான உள அழகு ஆகிய உயரிய அழகுகளை அருமையாக படம்பிடித்துக் காட்டுகின்றார். இதுதான் விவிலியம் காட்டுகின்ற அழகு.

## 11 விதை தரும்....

பழங்களைத் தந்தது. புளிய மரம் புளிப்புத் தன்மையுள்ள பழங்களைத் தந்தது. அதன் அருகிலேயே நடப்பட்ட அரளி உயிரையே போக்கும் நச்சு விதையைக் கொடுத்தது. விதைக்குள் என்ன இருக்கிறதோ அதுதான் விளைச்சலாக வெளியே வந்து உள்ளதுபோல் மலர்ந்து விதையின் இயல்புக்கு ஏற்றவாறுதான் விளைவின் தன்மையும் இருக்கிறது. விதையைப் போன்றுதான் நம்முடைய உள்ளம் என்ன இயல்பில் இருக்கிறதோ அதைப் போன்றே நமது வளர்ச்சியும், ஆளுமையும் இருக்கின்றது.

இன்றைய விதைகளாக இருக்கின்ற குழந்தைகள் வாழ்வில் நற்பண்புகளை, வாழ்வியல் நெறிகளை விதைகளாக ஊன்றி அதற்கேற்றவாறு வளர, வாழ, சமூகத்துக்குப் பயன்தர நாம் அவர்களுக்குக் கற்றுத்தரும் ஒவ்வொரு எழுத்தும் விதைகள்தான். பிஞ்சு உள்ளங்களில் நல்ல விதைகளைத் தூவுவோம். அவர்கள் செல்லும் பாதை செம்மையாக இருக்க நமது வாழ்வின் வளம் கூடும்.

## 03 கொழும்பு உயர்மறைமாவட்ட

வாய்ப்புக்காக வாழ்க்கை முழுவதும் தேடித் தேடி களைத்துப் போன பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மத்தியில் இலட்சியத்தோடு, கனவுகளோடு வாழ்ந்து சாதனை படைப்போர் பலர் உண்டு. இன்று எல்லாத் துறைகளிலும் இளைஞர்கள் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறெல்லாம் சாதனைப் புரிந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் பலர் தொடர்ந்து சாதனை புரிந்து வாழ்வதற்கும், சாதனைப் புரியாமல் வேதனைத் தீயில் வாழும் இளைஞர்கள் சாதிப்பவர்களாக மாறுவதற்கும் மாற்றுவதற்கும் வாழ்க்கை முறை தேவை. இவ்வாழ்வை முறையை ஆன்மீகம் என்றும் அழைக்கலாம். சாதிப்போர் சறுக்கி விழாமல் இருக்க, வேதனைப்படுவோர் புதிய வழிமுறைகளைக் கண்டுகொள்ள இவ்வான்மீகம் வழிகாட்டும். இதற்கு முன்னோடியாக இறை இயேசு தம் வாழ்வையே பிறருக்கு தாரைவார்த்து வழிகாட்டினார். இறைமை செத்துகிடந்த மானிட சமுதாயத்தில் சட்டத்திற்கு அல்ல மானிடத்திற்கு சிறப்பிடம் கொடுத்து வாழக் கற்றுக்கொடுத்தார். இந்த இயேசுவின் புதிய ஆன்மிக வழிமுறை பலருக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

## 14 திருச்சபையின்...

பணிக்கப்பட்டார். நடந்து செல்லும்போது வழியில் மயங்கி வீழ்ந்தார். சிஸ்டர்சியன் மடம் ஒன்றில் கிடத்தப்பட்டார். சிறிது குணம் பெற்று அம்மடத்தாரின் வேண்டுகோளுக்கேற்ப, தம் இறுதி இலக்கியப் பணியாகிய உன்னத சங்கீதத்தின் விளக்கவுரை எழுதினார். இறுதி நற்கருணை வழங்கப்பட்டது. ஆண்டவரே நான் எழுதியதை றோமன் கத்தோலிக்க திருச்சபையின் விமர்சனத்திற்கு விட்டுவிடுகிறேன். அதில் பிழை சுட்டிக் காட்டப்பட்டால் தாழ்மையாக ஏற்கிறேன் என்றார். 1274 பங்குனி 7ம் நாள் உயிர் நீத்தார். 100 வயதுடைய ஒரு அறிவாளிகூட இவர் 49 வருடங்களில் எழுதிய அனைத்து புத்தகங்களையும் துல்லியமாக புரிந்துகொள்வது கடினம் என்பது சான்றோர்கள் கூறும் கருத்துரை. இதில்தான் இறைஞானத்தைக் காண்கிறோம். கல்வி நிறுவனங்களின் பாதுகாவலராக திருத்தந்தை 13ம் சிங்கராயர் இவரை உலகிற்குப் பிரகடனம் செய்தார். இவர் “சம்மனசுகளின் சாஸ்திர்” என போற்றப்படுகிறார்.

திருச்சபை புகழ்ந்திடும் புண்ணியமாம்
தூய கற்பினில் தலை சிறந்து
தேவதூதன் போல் வாழ்ந்த
திரு அடியாரே அக்வினாஸ்


விவிலிய அறிவைப்போல் உயர்ந்த
தேவ அறிவினை எழுதியவர்
வேந்தன் அருளிய கருத்தினையே
விளம்பிய எளிமைக் கணையுண்டோ.




## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் 29 வயதுடைய தனியார் வங்கியில் தொழில்புரியும் கத்தோலிக்க மகனுக்கு, நல்ல குடும்ப பின்னணி உள்ள படித்த மணமகள் தேவை.

**தொடர்பு கொள்ளும் எண் 0775746601** (N5071)



## மணமகன் தேவை


கொழும்பில் பிறந்த, கத்தோலிக்க, தமிழ், 26 வயது மகளுக்கு நல்ல குணமுடைய மணமகனை தேடுகின்றோம்.

**தொடர்புகளுக்கு : 0777063626, 0777065100** (N5184)

## தேவை

கொழும்பில் வீடு ஒன்றில் தங்கி சமையல் வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. வயது 30-50 இடைப்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள **077-8755859** (சிங்களத்தில்) (N5183)


## கண்டுபிடியுங்கள் – விடைகள்




## இளமை என்பது ....

வாழ்வு என்னும் நூலிலிருந்து
பிரித்தெடுக்கப்பட்ட ஓர் அதிகாரமல்ல, நூலின்
மற்ற பகுதிகளோடு தொடர்ந்து எழுதப்படும்
முன்னுரையும் அல்ல
மாறாக,
இளமை என்பது
வாழ்க்கை என்னும் நூலுக்கு
எழுதப்பட்டுள்ள முன்னுரை
மரமாய் வளர்வதற்கான விதை...

வாழ்க்கை என்ற கட்டிடத்தைக்
கட்டி எழுப்ப பயன்படும் அடித்தளம்.

வாழ்க்கை என்ற படகை சரியான திசையில்
ஓட்டிடும் சுக்கான்.

# மாற்றுச் சிந்தனையை உலகுக்கு காட்டியவர்



நீச்சல் போட்டியில் சென்றவிடமெல்லாம் தங்கங்களை அள்ளிக் குவித்திருப்பவர், மாற்றுத்திறனாளி மைக்கிள் பெல்ப்ஸ் (Michael Phelps) அவர்கள். ஒலிம்பிக் போட்டிகளில் 23 தங்கங்கள் உட்பட 28 பதக்கங்களை பெற்ற சாதனையாளர் இவர். 2008ம் ஆண்டு பெய்ஜிங் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில், எட்டு தங்கப் பதக்கங்களை வென்று, அதற்கு முந்தைய சாதனையை முறியடித்திருப்பவர். 2016ம் ஆண்டில் ரியோ தெ ஜெனெய்ரோ ஒலிம்பிக் போட்டியில் ஐந்து தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளி பதக்கத்தை வென்றதுடன், ஒலிம்பிக்கில் பங்கேற்பதை, நிறுத்திக்கொள்வதாக இவர் அறிவித்தார். அப்போது அவருக்கு வயது 31. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பால்டிமோரில் பிறந்த மைக்கிள் பெல்ப்ஸ் அவர்கள், ஏழு வயதாக இருந்தபோது, அளவுக்கு மீறிய இயக்கத்தினால் வரும் கவனக் குறைபாட்டு நோயினால் (ADHD Attention Deficit Hyperactivity Disorder) தாக்கப்பட்டார்.

ஒரு நிமிடம்கூட உட்காரவும், ஒருமுகத்தன்மையோடு செயல்படவும் கஷ்டப்பட்டவர். மிகவும் கவனக்குறைவால் சிரமப்படுகிறான் என, பள்ளியில் இவரது ஆசிரியர்கள் குறை சொல்லியிருக்கிறார்கள். இவர்தான் இவரது தாய்க்கு மூன்றாவது மற்றும் கடைசி மகன். ஆனால், இவருக்கு ஒன்பது வயது நடந்தபோது இவரது தந்தை இவர்களைவிட்டுப் பிரிந்து விட்டார். தனது தந்தையின் பிரிவு தன்னை மிகவும் பாதித்தது எனவும், தான், பலமுறை கடும் மனஇறுக்கத்திற்கு உள்ளானதாகவும் இவர் கூறியுள்ளார். இவரது தாய், தனது மூன்று பிள்ளைகளையும், ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும், விளையாட்டில் திறமையுள்ளவர்களாகவும் வளர்த்தார். ஆரம்பத்தில் கால்பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டிய மைக்கிள் பெல்ப்ஸ் அவர்கள், தனது பதினோராவது வயதில் நீச்சலில் அதிக ஈடுபாடு உருவாகிறதை உணர்ந்தார். அதற்குப் பின்னர் தொடர்ந்து நீச்சல் பயிற்சியில் கவனம் செலுத்தினார். இரண்டாயிரமாம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடந்த ஒலிம்பிக்கில், தனது பதினைந்தாவது வயதில் முதலில் அறிமுகமானார். பின்னர் தொடர்ந்து ஒலிம்பிக்கில் பதக்கங்களை வென்றார் இவர். மைக்கிள் பெல்ப்ஸ் அவர்கள், இளம்வயதில் மோசமான உடல்நிலை, குடும்பம் சார்ந்த வேதனை என எல்லாவற்றையும் கடந்து வெற்றி பெற்றதற்கு, அவரிடம் விளங்கிய சுய ஒழுக்கம், தீராத விளையாட்டு ஆர்வம், உறுதியான குறிக்கோள், அயரா உழைப்பு போன்ற பண்புகளே காரணம் என, பலரும் பாராட்டுகின்றனர்.

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்







## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



## திருமண சேவைகள்

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்













| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |


- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**


| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |








## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்